Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 ஆனி - 09 24-06-2003 செவ்வாய்க்கிழமை ஓசை 126

வவுனியா ஒப்டிக்கல்
Vavuniya Optical

கண் பரிசோதிக்கப்பட்டு மூக்குக் கண்ணாடி 1/2 மணித்தியாலத்தில் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வைத்தியத் துண்டுகளுக்கும் உடன் கண்ணாடி வழங்கப்படும்



வவுனியா ஒப்டிக்கல், 30 பஸ் நிலையம், வவுனியா.

(சி-3343)



## தேசியத் தலைவரின் உறுதியான எதிர்பார்ப்பிற்கு செயல் உருவம் கொடுத்துள்ள 'வன்னி ரெக்'

### 'வன்னி ரெக்'கிற்கான வாழ்த்தில் அரசியல்துறைப் பொறுப்பாளர்

தேசாபிமான உணர்வோடும் தேசப்பற்றுணர்வோடும் புலம் பெயர்ந்து வாழும் எமது உறவுகள், தாம் வாழும் நாடுகளில் கற்றுத்தேர்ந்து அவற்றை இங்கு கொண்டு வந்து இங்குள்ள எமது உறவுகளோடு பகிர்ந்து கொள்வார்கள் என்ற எமது தேசியத் தலைவரின் உறுதியான எதிர்பார்ப்பு இன்று செயல் உருவம் பெற்றுள்ளது என 'வன்னி ரெக்' தகவல் தொழில்நுட்ப நிறுவன ஆரம்ப விழா குறித்து விடுக்கப்பட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களின் வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அமெரிக்கா வாழ் தமிழ் மக்களின் ஆதரவோடு 'வன்னி ரெக்' கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுள்ளது. எமது சமூகத்தின் கல்வியைச் சீர்குலைத்து, எமது தேசிய வாழ்வை சீர்குலைத்து, எம்மை இன ரீதியாக அழித்தொழிப்பதிலேயே எமது எதிரி குறியாக இருந்து வருகின்றான். இன்று போர் ஓய்ந்திருக்கிறது. ஒரு விதமான அமைதிச் சூழல் ஏற்பட்டிருக்கிறது. ஆயினும், இன்றுள்ள சிங்கள அரசாங்கம் எமது இனத்திற்கு கல்வியை

(08ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்கள் இடைநிறுத்தம், டோக்கியோ உதவிகள்

# ரொனி பிளேயர் -ரணில் சந்திப்பில் முக்கிய இடம்!

## இடைக்கால நிர்வாகம் குறித்த சிக்கல்கள் பிரி.அரசியல் விவகார அமைச்சருடன் சந்திப்பு

(லண்டன்)

**சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரைச் சந்தித்து தற்பொழுது தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கள், டோக்கியோ மாநாட்டு உதவிகள் என்பன குறித்துப் பேச்சுக்களை நடத்திய அதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரிட்டிஷ் அரசியல் விவகாரத்துறை அமைச்சரைச் சந்தித்து இடைக்கால நிர்வாக சபை குறித்த சிக்கல்கள், அரசியல் யாப்பில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் என்பன குறித்து ஆராய்ந்துள்ளார்.**



பிரிட்டிஷ் சென்றுள்ள சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரிட்டிஷ் பிரதமரை நேற்றுக் காலை உத்தியோகபூர்வமாகச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள், டோக்கியோ உதவிகள் தொடர்பாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன.

தற்போது இடை நிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாகவும் இரு தலைவர்களுக்குமிடையே கருத்துக்கள் பரிமாறப்பட்டன. டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் கிடைக்கப்பெற்ற நிதி உதவிகளை நாட்டின் அபிவிருத்தித் திட்டங்க

(08ஆம் பக்கம் பார்க்க)



## 'வன்னி ரெக்' தொழில்நுட்ப நிறுவனம் அரசியல்துறைப் பொறுப்பாளரால் திறப்பு

வன்னி ரெக் தகவல் தொழில் நுட்ப நிறுவனம் நேற்றுக் காலை கிளிநொச்சியில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அமெரிக்கா வாழ் தமிழ் மக்களின் உதவியுடன் வன்னிப் பகுதியில் திறந்து வைக்கப்பட்டுள்ள மேற்படி நிறுவனம் பல்வேறு நவீன வசதிகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியினை மகளிர் அரசியல்

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணி முன்னாள் உறுப்பினர் சுட்டுக்கொலை

அம்பாறை மாவட்டம் வீரமுனையில் நேற்று மாலை 6.45 மணியளவில் ஈ.பி. ஆர். எல்.எவ். வரதர் அணியைச் சேர்ந்த முன்னாள் உறுப்பினர் பாக்கியராசா குமாரதாசன் (36வயது) என்பவர் இனம் தெரியாதவர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் தனது வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளில் கடைக்குச் சென்று திரும்பும் போது சிந்தாத்துறை பிள்ளையார் கோவிலுக்கு அருகில் சுடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தெஹிவளை குற்றப் புலனாய்வுத்துறை பொறுப்பதிகாரி சுட்டுக்கொலை

தெஹிவளைப் பிரதேசப் பயங்கரவாத எதிர்ப்பு புலனாய்வுத்துறைப் பொறுப்பதிகாரி சுனில் காப்றோ சுட்டுக் கொலை செய்யப்பட்டார். நேற்று மு.ப 10.30 மணியளவில் தெஹிவளைப் பொலிஸ் நிலையத்தின் இந்த உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்ரர் அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தக் கொலையைப் புரிந்தவர் தப்பித்துச் செல்வதை அவதானித்த சிலர் இது தொடர்பாக பொலிசாருக்கு அறிவித்ததனைத் தொடர்ந்து சந்தேக நபரைப் பின்தொடர்ந்து சென்று பம்பலப்பிட்டி புனித மரியமடம் கல்லூரிக்கு அருகாமையில் சாலி வீதியில் வைத்துக் கைது செய்ததாகப் பொலிசார் தெரிவித்தனர். அவர் பயணம் செய்த முச்சக்

(08ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நாவலர் வீதிப்பகுதியில் பொலிசார் திடீர்ச்சோதனை

கஸ்தூரியார் வீதிக்கும் பலாலி வீதிக்கும் இடைப்பட்ட நாவலர் வீதிப்பகுதிகளில் இராணுவத்தினர் நேற்று முன்தினம் காலை திடீரென சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.காலை 6.30 மணியளவில் பெருமளவு இராணுவத்தினர் இப்பகுதியில் இறக்கப்பட்டனர். இவர்கள் வீதியோரங்களிலுள்ள மதில்களின் பின்பும் பதுங்கி நின்றதுடன் வீதிகளில் மரங்களின் பின்பும் பதுங்கி நின்றதுடன் வீதிகளில் சென்ற பயணிகள் இறக்கப்பட்டுச் சோதனை

(08ஆம் பக்கம் பார்க்க)

## சாகாமம் பகுதி மீனவரிடம் மீன்களைப் பறிக்கும் படையினர்

அம்பாறை மாவட்டத்திலுள்ள சாகாமம் பகுதியில் மீளக்குடியேறிய மீனவர்களிடமிருந்து சாகாமம் விசேட அதிரடிப் படையினர் ஒவ்வொரு மீனவர்களிடமிருந்தும் நாள் ஒன்றுக்கு இரண்டு கிலோ மீனைப் பெறுகின்றனர்.

1990 ஆம் ஆண்டு இவர்கள் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழ்ந்து இப்போது தங்கள் சொந்த இடங்களில் குடியேறியுள்ளனர். இவர்களில் அதிகமானோர் மீன்பிடித் தொழிலை நம்பி வாழ்பவர்கள். இவர்களிடம் இப்படையினர் நாள் ஒன்றுக்கு 30 கிலோ வரும்

(08ஆம் பக்கம் பார்க்க)

## இ.தொ.கா.வின் மறியல் போராட்டத்தில் இரு இடங்களில் தாக்குதல்கள்

### தொண்டமானின் உடை கிழித்தெறியப்பட்டது


நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சினால் மேல்கொத்மலையில் அமைக்கப்படவுள்ள நீர் மின் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மேற்கொண்ட மறியல் போராட்டத்தின்போது இரு இடங்களில் நடத்தப்பட்ட தாக்குதலில் அமைச்சர் தொண்டமானின் உடை கிழிக்கப்பட்டதுடன் தொண்டர்கள் இருவர் காயமடைந்துள்ளனர்.

மலையகத்தில் 32 இடங்களில் தொழிலாளர் காங்கிரஸ் நேற்று வீதி மறியல் போராட்டத்தை நடாத்தியுள்ளனர். காலை தொடக்கம் மாலை 2.00 மணி வரை இப்போராட்டம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இப்போராட்டம் நடத்தியோர் மீது இரு இடங்களில் தாக்குதல் நடத்தப்பட்டது. நுவரெலியா மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதியமைச்சர் நவீன் திஸாநாயக்க தலை

(08ஆம் பக்கம் பார்க்க)

# குருகுலம், காந்தி சேவா சங்கம் ஆண்டு விழா நிகழ்வில்...










## வரிவிளம்பரம்

### விவசாயிகளே!

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத்தேவையான தென்னை, பலா, மாதுளை, எலுமிச்சை (தேசி), கமுகு, கொய்யா, கொடித் தோடை, தோடை, சவுக்கு மற்றும் பல தரமான நல்லின நாற்றுக்களைக் குறைந்த விலையில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (3275)

### காணி விற்பனைக்கு

கிளிநொச்சி இரத்தினபுரம் பிரதான வீதியில் டிப்போச் சந்தியில் இருந்து 500 மீற்றர் தூரம் இராசையா கடையடியில் 2 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு தொடர்புக்கு; இராசையா கடையடி (அருகாமை), இரத்தினபுரம், கிளிநொச்சி. (3347)


## காணிகள் வழங்கல்

முல்லைத்தீவு சிலாவத்தை தியோகு நகர்ப்பகுதி மக்களுக்கு நேற்று புதிய காணிகள் வழங்கப்பட்டன.

1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து 1996ஆம் ஆண்டுக்குப்பின் மீளக்குடியமர்ந்த 64 குடும்பங்களுக்கே இக்காணிகள்வழங்கப்பட்டன. (20)

## கண்டெடுப்பு

முறிகண்டிப் பகுதியில் கருணாகரன் குமரன் (843100619V) சவிபுரம் புத்தளம் என்பவரது தேசிய அடையாள அட்டை ஒன்றும், துரையர் கஜேந்திரன் (வயது-39) அழகரத்தினம் வீதி வட்டக்கச்சி என்பவரது பயண அனுமதி அட்டையும் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் அதனை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். (பா)

□ □ □

கடந்த 09.06.2003 அன்று நடைபெற்ற வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் விழாவின் போது தவறவிடப்பட்ட ஒரு பேர்ஸ் மறுநாள் ஆலயப்பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது இதற்குள் பணமும் வேறுசில சிட்டைகளும் உள்ளன. இப்பேர்ஸ் தற்போது முள்ளியவளை பிரபா பல்பொருள் வாணிபத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப் பேர்சினை உரியவர்கள் மேற்படி வாணிபத்தில் பெற்றுக்கொள்ளுமாறு முள்ளியவளைப் பிரதேச வர்த்தக சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (ஆ)

-"பி" பட்டியலில் பெயர் இருந்தும்-

## நியமனம் கிடைக்காத தொண்டராசிரியர்களின் மேன்முறையீடு குறித்து விசாரணை

"பி" பட்டியலில் பெயர் இருந்தும் நியமனம் கிடைக்காத தொண்டர் ஆசிரியர்களின் மேல்முறையீட்டுக்கான மேலதிக விசாரணை நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

மடு, வவுனியா வடக்கு, முல்லை, துணுக்காய், கிளிநொச்சீ கல்வி வலயங்களில் பி பட்டியலில் பெயர் இருந்தும் தொண்டர் ஆசிரியர் நியமனம் கிடைக்காத ஆசிரியர்களின் மேல் முறையீட்டினை வலையக்கல்வி பணிப்பாளர்களின் முன்நிலையில் ஆய்வு செய்ய வடக்கு - கிழக்கு கல்விச்செயலாளர் தியாகலிங்கம் நாளை மு.ப.10.00 மணிக்கு கிளிநொச்சி கல்வி வலயப்பணிமனையில் சமுகமளிக்கவுள்ளதால் "பி" பட்டியலில் பெயர் இருந்தும் நியமனம் கிடைக்காத தொண்டர் ஆசிரியர்கள் தவறாது வருகை தரும்வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

## அளம்பில் திலீபன் மருத்துவமனை ஓராண்டு நிறைவு விழா இன்று

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு அளம்பில் பகுதியில் அமைந்துள்ள திலீபன் ஞாபகார்த்த மருத்துவ மனையின் ஓராண்டு நிறைவு விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மருத்துவ சேவை இல்லாத வேளையில், மக்கள் நலன் கருதி விடுதலைப்புலிகளின் மருத்துவப் பிரிவினரால் அமைக்கப்பட்ட இம்மருத்துவ மனை மக்களுக்கு பெரும் சேவையினைச் செய்துவருவது குறிப்பிடத்தக்கது. (20)

## பிற்போடப்பட்ட தேர்தலை முன்கூட்டி நடத்த முடியாது

*பிரதித் தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு*

பிற்போடப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தலை குறித்த திகதிக்கு முன்னர் நடாத்த முடியாதெனவும், சட்டத்தில் அதற்கான இடமில்லையெனவும் பிரதித் தேர்தல் ஆணையாளர் அருந்தவச்செல்வம் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல் அடுத்த வருடம் சனவரி மாதம் 24ஆம் திகதி வரை பிற்போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜீவனோபாய உதவிக் கொடுப்பனவுகள் கிளிநொச்சியில் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

வட-கிழக்கு அவசர புனர் நிர்மாணத் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட உதவித் திட்ட ஜீவனோபாய உதவிக் கொடுப்பனவுகள் நிக்கொட் நிறுவனத்தினரால் கிளிநொச்சியில் மீள்குடியேறியுள்ள மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. மேற்படி நிக்கொட் நிறுவனத்தினால் கடந்த 19ஆம் திகதி வரை கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியமர்ந்த 3800 குடும்பங்களுக்கு முதற்கட்ட கொடுப்பனவாக தலா 25,000 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு மேற்படி கொடுப்பனவுகள் துரித கதியில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கிளி. மாவட்ட நிக்கொட் நிறுவன பிரதித்திட்டப்பணிப்பாளர் கே. பார்த்தீபன் தெரிவித்துள்ளார்.

இவர் கடந்த சில வாரங்களுக்கு முன்பே மேற்படி பதவியினை கையேற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (சோ)

## நேர்முகக்கடிதம் கிடைக்காதோர் சமுகம்தரக் கோரிக்கை

(அலுவலக செய்தியாளர்)

தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் போதனாசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகத்தேர்வு நடைபெறவுள்ளது.

மேற்படி கிளிநொச்சி தொழில் பயிற்சி நிலையத்திற்கு போதனாசிரியர்களை தேர்ந்தெடுப்பதற்கான மேற்படி தேர்வு நாளை காலை 10 மணிக்கு கொழும்பில் நடைபெறவுள்ளது இது வரையும் நேர்முகத் தேர்விற்கான கடிதங்கள் கிடைக்கப் பெறாதவர்கள் இன்று காலை 9.00மணிக்கு நேர்முகத் தேர்விற்கு செல்வதற்குரிய ஆயத்தங்களுடன் மேற்படி கல்லூரிக்கு சமுகம் தருமாறு தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார். (பா)

-சுபத்திரன் கொலை தொடர்பாகக் கைதான-

## பாடசாலை காவலாளிக்கு விளக்கமறியல் நீடிப்பு

ஈ.பி.ஆர் எல்.எவ் வரதர் அணியின் பிரதித்தலைவர் சுபத்திரனின் கொலைவழக்கு நேற்று யாழ். நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டுள்ளது.

இவரது கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட வேம்படி மகளீர் கல்லூரியின் காவலாளர்கள் இருவரையும் எதிர்வரும் 07ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.


## THE ECONOMIC CONSULTANCY HOUSE (TECH)
## பொருண்மிய மதியுரையகம்

பொருண்மிய மதியுரையக நிறுவனத்தின் வட்டக்கச்சியிலுள்ள ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையில் கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களிற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**(1) பொது முகாமையாளர்** - General Manager (01)

**(2) உதவிப் பொது முகாமையாளர்** - Deputy General Manager (04)

தகைமைகள்:

**(1) பொது முகாமையாளர்**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெறப்பட்ட விவசாயப் பட்டத்துடன் 10 வருட பண்ணை அனுபவம் அல்லது விவசாய டிப்ளோமாவுடன் 20 வருட பண்ணை அனுபவம்.

**(2) உதவிப் பொது முகாமையாளர்**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெறப்பட்ட விவசாயப் பட்டத்துடன் 05 வருட பண்ணை அனுபவம் அல்லது விவசாய டிப்ளோமாவுடன் 10 வருட பண்ணை அனுபவம்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளிற்கு கவர்ச்சிகரமான சம்பளத்துடன் ஊக்குவிப்புத் தொகையும் வழங்கப்படும்.

தகுதியான விண்ணப்பதாரிகள் தமது சுயவிபரக்கோவையுடன் கூடிய விண்ணப்பத்தினை 10.07.2003ம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு தலைவர். பொருண்மிய மதியுரையக மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி, கிளிநொச்சி. எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "மாதிரிப் பண்ணையில் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடவும்.

*தலைவர்,*
*பொருண்மிய மதியுரையகம்,*
*வட்டக்கச்சி.*
*கிளிநொச்சி.*

(3348)

# அரிசோனா மாகாணத்தில் காட்டுத் தீ ஒன்பதாயிரம் ஏக்கர் காடுகள் அழிந்தன!

## தீயணைப்புப் படையினர் பெரும் போராட்டம்

(வாஷிங்டன்)

**அமெரிக்காவின் வனப் பகுதிகளில் காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது. அரிசோனா மாகாணத்தில் இதுவரை சுமார் ஒன்பதாயிரம் ஏக்கர் பரப்பளவிலான காடுகள் தீக்கிரையாகியுள்ளன.**

மிகப்பெரிய பரப்பளவைக் கொண்ட அமெரிக்காவில் ஏராளமான காடுகளும் பரந்துவிரிந்து கிடக்கின்றன.

கடந்த ஆண்டில் மட்டும் பல் வேறு பகுதிகளில் அடுத்தடுத்துக்காடுகளில் தீவிபத்து ஏற்பட்டுளளது.

இந்நிலையில் அந்நாட்டின் அரிசோனா மாகாணத்திலுள்ள சமர்சவர் வனப்பகுதியில் தற்போது தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

அங்குள்ள பைன் மரக்காடுகளில் ஏற்பட்ட தீ மிக வேகமாகப் பரவி வருகின்றது. இதுவரை சுமார் ஒன்பதாயிரம் ஏக்கர் பரப்பளவிலான வனப்பகுதி தீக்கிரையாகியிருப்பதால் அப்பகுதியைச் சுற்றிலும் புகை மூட்டம் சூழ்ந்துள்ளது.

இந்தத் தீவிபத்தில் நூற்றுக்கணக்கான வீடுகளும் சேதமடைந்துள்ள நிலையில் அங்கு வசித்து வந்தவர்கள் அனைவரும் தங்களிடங்களைவிட்டு அகன்று வருகின்றனர்.

தீயைக் கட்டுப்படுத்தும் பணியில் உலங்கு வானூர்தியின் உதவியுடன் தீணைப்புப் படையினர் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

இத்தீவிபத்துக் காரணமாக அம்மாநில ஆளுநர் நெருக்கடி நிலையைப் பிரகடனப்படுத்தியுள்ளார்.



காட்டுத்தீயினால் எரியுண்டு போன துவிச்சக்கர வண்டியைப் படத்தில் காணலாம்

## ரயில் விபத்தில் 17 பேர் உயிரிழப்பு

மகாராஸ்ராவில் சிந்துதூக் மாவட்டத்தில் நேற்று முன்தினமிரவு ஏற்பட்ட ரயில் விபத்தில் 17 பேர் உயிரிழந்துள்ளனர். 50 பேர்காயமடைந்துள்ளனர்.

இவர்களில் 04 பெண்கள், 03 குழந்தைகளும் அடங்குகின்றனர்.

ரயிலின் 03 பெட்டிகள் நேற்று முன்தினமிரவு 10 மணியளவில் தடம் புரண்டதில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

# ஈராக்,ஆப்கானைப் போன்று ஈரானை மதிப்பிட வேண்டாம்


## சிரேஷ்ட இஸ்லாமிய தலைவர்

(தெஹெர்ரான்)

ஈராக்மற்றும் ஆப்கானிஸ்தானைப்போன்று ஈரானைக் கருதவேண்டாம் என்று ஈரானிய சிரேஷ்ட இஸ்லாமியத் தலைவர் ஒருவர் அமெரிக்காவை எச்சரித்துள்ளார்.

அத்துடன் அண்மையில் இஸ்லாமிய சட்டங்களுக்கு எதிராக செயற்பட்டவர்களுக்கு மரண தண்டனை விதிக்குமாறும் அவர் ஈரான் ஆட்சியாளர்களை வலியுறுத்தியுளளார்.

இதேவேளை ஈரான் அணுவாயு தங்கள் தொடர்பான அறிக்கைகளை முறையாக வெளியிடவில்லை என்று ஐக்கிய நாடுகளின் அணுவாயுத கண்காணிப்பு நிறுவனம் அண்மையில் அறிவித்திருந்தது. இதனை அடுத்து ஈரானை தப்பாக குறைத்து மதிப்பிட வேண்டாம் என அந்த நாட்டின் அரசியல் அமைப்பு பாதுகாவலர் சபை உறுப்பினரான அப்துல்லா முகமட் ஜஸ்பி இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.



ஈராக்கில் எண்ணெய் விநியோக பாதையொன்று நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதலில் தீப்பற்றி எரிகிறது. இதனை நோக்கி அமெரிக்காவின் அப்பாச்சி ரக உலங்கு வானூர்தி செல்கிறது.

# வெடிபொருட்களுடன் சரக்குக் கப்பல் கிரேக்கப் படையினரிடம் சிக்கியது!

(எதென்ஸ்)

கிரேக்க நாட்டின் விசேட பாதுகாப்புப் பிரிவினர் 680 தொன் வெடிபொருட்கள் அடங்கிய கப்பல் ஒன்றைக் கைப்பற்றினர்.

கைப்பற்றப்பட்ட கப்பல் ஆபிரிக்க கடற் பாதையூடாக பயணப்பட்டதாகவும் எங்கு அக்கப்பல் சென்றுகொண்டிருந்தது என்பது பற்றி தமக்குத் தெரியாது என்று எதென்ஸ் செய்திகள் தெரிவிக்கின்றன.

'அமோனியா டைனமற்' என்ற நிலக்கண்ணிகளுக்கு பயன்படுத்தப்படும் அதிக வெடிபொருட்கள் இக்கப்பலில் காணப்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். வெடிபொருட்களுடன் ஏனைய நிலக்கண்ணித் தாக்குதலுக்கான கருவிகளும் கப்பலில் காணப்பட்டன.



இந்தியாவின் குவகாத்தி நகரிலுள்ள காமக்கியா ஆலயத்தில் வருடாந்தம் நடக்கும் 'அம்புபச்சி மேளா' திருவிழாவில் இந்துசாமியார் ஒருவர் எருமை கொம்பிலாலான வாத்தியமொன்றை வாசிக்கிறார்.

# சீனாவுடன் அனைத்துத் துறைகளிலும் ஒத்துழைப்பைப் பேண விரும்புகின்றோம்!

## பெய்ஜிங்கில் வாஜ்பாய் அறிவிப்பு

அனைத்துத் துறைகளிலும் சீனாவுடனான உறவுகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிப்பதாக பிரதமர் வாஜ்பாய் கூறியுள்ளார்.

நேற்று சீன தலைநகர் பெய்ஜிங்கில் மக்கள் மாமன்றத்தில் சீனப் பிரதமருடன் நடத்திய குறுகிய விவாத்திற்குப் பின்னர் செய்தி யாளர்களிடம் இதனைக் கூறியுள்ளார்.

அத்துடன் சீனா குறுகிய காலத்தினுள் பொருளாதார வளர்ச்சி கண்டுள்ளது.இந்தியா சீனாவிற்கிடையே பொருளாதார ஒத்துழைப்புக்கள் மிகவும் பிரகாசமாக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அமைதி,நல்லெண்ணம், நட்புறவு, ஒத்துழைப்பு வளர்க்கும் நோக்குடன் தான் சீனா வந்துள்ளதாகவும் அவர் உறுதிபடக் கூறியுள்ளார்.

இதற்கு முன்னர் பெய்ஜிங் மக்கள் மாமன்றத்தில்சீனா-இந்தியவிற்கிடையே 09 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

பொருளாதாரம், கல்வி, கலாச்சாரம், அறிவியல் தொழில் நுட்பத்துறை, முக்கியதூதரக உடன்பாடு, விஸா கட்டுப்பாடு என்பனவும் இதில் உள்ளடங்குகின்றன.

# மனித உரிமைகளை வலியுறுத்தி புஷ்,முஷாரப்புக்கு அழுத்தம்

அமெரிக்க சனாதிபதி ஜோர்ச் புஷ்சும், பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப்பும் இன்று நடைபெறவுள்ள ஹம்டேவிட் - உச்சிமாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவர்கள் மனித உரிமைகள் விடயத்துக்கு உயர் முன்னுரிமையளித்து உரையாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.

இதுபற்றி அவர்களுக்குக் கடிதம் எழுதியிருப்பதாக மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் ஆசியப் பிரிவு இயக்குநர் ராவ் அடம்த் வாஷிங்டனில் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் மனித உரிமைகள் மீறலுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# வெள்ள அச்சுறுத்தலால் மக்கள் வெளியேற்றம்

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் மேற்கு புளோரிடாவில் இருந்து நேற்று முன்தினம் நூற்றுக்கணக்கான மக்கள் வெள்ளப் பெருக்கு அச்சம்காரணமாக வெளியேறியுள்ளனர்

தொடரும் பெருமழையினால் வெள்ள அனர்த்தத்திற்குள் சிக்கிவிடும் அபாயம் கருதி இவர்கள் வெளியேறியதாக நியாமி செய்திப் பிரிவு தெரிவிக் கின்றது.

மேற்படி வெள்ளப்பெருக்குக்கு அணைக் கட்டுக்கள் சரிவரச் செய்யப்படாமையே காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## அருகும் அபாயம்

(பெய்ஜிங்)

கடற்குதிரைகள் அழியும் உயிரினங்களில் சேர்ந்துள்ளது. சீனாவில் இந்த அச்சம் எழுந்துள்ளது.சீனச் சந்தையில் சுதேச மருந்துகளுக்காக கடற்குதிரைகள் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. இதன் காரணமாக சீனக் கடற்பிரதேசத்தில் இவற்றின் உயிர்வாழ்க்கை அருகிவருகின்றன

# பலஸ்தீன தீவிரவாதிகள் மீது அமெரிக்கா பலத்த கண்டனம்!

பலஸ்தீனத்தில் தீவிரவாத நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டுவரும் அமைப்புக்கள் மீது குறிப்பாக கமாஸ் அமைப்பின் மீது அமெரிக்கா பலத்த கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

சமாதானத்துக்கு எதிராக செயற்படும் கமாஸ் இயக்கம் மீதும் ஏனைய ஆயுதக் குழுக்கள் மீதும் கடுமையான அழுத்தங்களைச் சர்வதேச சமூகம் கொடுக்க வேண்டும் என்று அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு வாரங்களாக நடத்தப்பட்ட தாக்குதலில் கமாஸ் இயக்கம் சமாதானத்துக்கு எதிராக செயற்படுகின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

போர்நிறுத்தம் ஒன்றை அமுல்படுத்த கமாஸ் இயக்கம் உள்ளிட்ட பல தீவிரவாத அமைப்புக்கள் மறுப்புத்தெரிவித்து வருகின்றமை தெரிந்ததே.

# 47 வருடங்கள் ஒப்பற்ற சேவையில்

# காந்தி சிறுவர் பராமரிப்பு நிலையம்

இன வன்முறைகள் மற்றும் போர் நடவடிக்கை காரணமாக அநாதைகளாக்கப்பட்டு நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்ட சிறுவர்களை இனங்கண்டு அவர்களை அதாவது "வளர்ந்து வரும் குழந்தைகள் நாளைய நாட்டின் வைரத் தூண்கள்" என்ற கூற்றுக்கமைவாக குழந்தைகளைப் பண்பட்ட மனிதர்களாக வளர்த்தெடுக்கும் பணியில் ஈடுபட்டு வரும் காந்திசேவா சங்கத்தின் காந்தி சிறுவர் இல்லத்தினுடைய இணைப்பாளர் கரிகரன் அவர்களின் பணிப்பில் இந்நிலைய முகாமையாளர், விடுதலை மாமா அவர்களுடனான நேர்காணல்.



காந்தி சேவாசங்கம் என்ற அமைப்பு 1956 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தின் உருத்திரபுரம் பகுதியில் சுமார் 06 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டது.

இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் வறுமையில் வாழும் மக்களுக்கு (இளம் வயதினருக்கு) தகுந்த தொழிற் பயிற்சி முறைகளை அமைத்து அவர்களது வாழ்வுக்கு புத்தொளியூட்டுவதாகும். அதற்கேற்ப இவ்விடத்தில் வாழ்ந்த இளைஞர் யுவதிகளுக்கு விவசாயம், அச்சுவேலை, நெசவு, தும்பு வேலை போன்ற தொழிற் பயிற்சி வகுப்புக்களை நடாத்தி வந்தது.

காலப் போக்கில் 01-01-1965 இல் தருமபுரம் பகுதியில் கஸ்தூரிபாய் இல்லம் என்ற சிறுவர் பராமரிப்பு இல்லத்தை ஆரம்பித்து பெற்றோர்களை இழந்த பிள்ளைகளைப் பராமரித்து அவர்களுக்குக் கல்வி அறிவு புகட்டி வந்தது.

1990 ஆம் ஆண்டு கஸ்தூரிபாய் இல்லத்தில் 20 பெண் பிள்ளைகளும், 03 ஆண் பிள்ளைகளும் பராமரிக்கப்பட்டு வந்தனர். கடந்த காலங்களில் ஏற்பட்ட போர் அனர்த்தங்களால் காந்தி சேவாசங்கம் செயலிழக்கும் தறுவாய் இருந்த போது இச்சங்கத்தை 1990 ஆம் ஆண்டு மே மாதம் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பொறுப்பேற்றுக் கொண்டு காந்தி சிறுவர் இல்லத்தையும் வழிநடத்தி வருகின்றது.

**◇ காந்தி சிறுவர் பராமரிப்பு நிலையத்திற்கான நிதியுதவி எங்கிருந்து கிடைக்கின்றது?**

இவ்வில்லத்திற்கான முழுமையான நிதியுதவி, பொருளுதவி என்பவற்றை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அவுஸ்திரேலியா, மலேசியா, நியூசிலாந்து கிளைகளினூடாகவே இதற்கான முழுமையான நிதியுதவிகள் கிடைக்கப் பெறுகின்றன.

**◇ இவ்வில்லத்தில் தற்போது எத்தனை சிறுவர்கள் வரை பராமரிக்கப்பட்டு வருகின்றனர்?**

படிப்படியாக இவ்வில்லம் வளர்ச்சி கண்டு இன்று வரையும் 169 ஆண் பிள்ளைகளை இங்கு வைத்துப் பராமரித்து வருகின்றோம்.

**◇ எவ்வாறான முறையில் அவர்களைப் பராமரித்து வருகின்றீர்கள்?**

கடந்த காலங்களில் ஏற்பட்ட போர் அனர்த்தங்களால் தமது கண்முன்னே தாய் தந்தையரை இழந்த சிறுவர்களையும், தாய் தந்தையர் இருந்தும் போர்ச் சூழலினால் ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவுகளினால் பிள்ளைகளைப் பராமரிக்க முடியாத நிலையில் உள்ள சிறுவர்களையும் உள்வாங்கி வருகின்றோம்.

**◇ எவ்வாறான கல்வி முறைகள் மூலம் கல்வி புகட்டி வருகின்றீர்கள்?**

ஆறு வயது தொடக்கம் 19 வயது வரைக்கும் உள்ள ஆண்கள் இங்கு பராமரிக் கப்பட்டு வருகின்றனர். இவர்களுக்கு அரசினர் பாடத்திட்டத்தின் படி பாடசாலைகளுக்கு அனுப்புவதோடு, பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் பிரத்தியேக வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டு இங்கு மேலதிகக் கல்வி புகட்டி வருகின்றோம்.

இதைவிடத் தொழிற் கல்வி முறை- இவ்வில்லத்தில் பராமரிக்கப்பட்டு வந்தவர்களுக்கு தச்சு வேலை, பாண் தயாரித்தல், உடை தைத்தல் போன்ற தொழிற் பயிற்சிகள் பயிற்றப்பட்டு வந்தது. குறிப்பாகத் தச்சு வேலைப் பயிற்சி மூலம் எமது இல்லத்தின் தேவைக்கான கட்டில்களை இவர்களே செய்ததால் அதற்குத் தேவையான கூலி மதிப்பிடப்பட்டு அக்கூலிக்குப் பெறுமதியான தொகை அந்தந்த மாணவர்களின் பெயரில் வங்கியிலிடப்பட்டு அவர்கள் விலகிச் செல்லும் போது வங்கிப்புத்தகங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



**◇ இவ்வில்லம் இராணுவ அனர்த்தங்களின் பாதிப்புக்குள்ளாகியுள்ளதா?**

1996 ஆம் ஆண்டிற்கு முன்னதாக இவ்வில்லம் அமைந்துள்ள இடம் மிகவும் வளமான ஒரு இடமாகவும், தென்னஞ் சோலையாகவும் இருந்தது. 1996 ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட சத்ஜெய இராணுவ நடவடிக்கை மூலம் நிரந்தரக் கட்டடங்கள் மற்றும் பயன்தரு மரங்கள் எல்லாம் முற்றாக இராணுவத்தினரால் அழிக்கப்பட்டதோடு மதிப்பிட முடியாத சொத்தழிவு ஏற்பட்டது.

இதேபோல் 1990 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆம் திகதி காலை 10 மணிக்குத் தருமபுரத்தில் அமைந்துள்ள கஸ்தூரிபாய் இல்லம் மீது விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதன் போது இரண்டு பிள்ளைகள் காயமடைந்தனர். ஏனைய பிள்ளைகள் பாடசாலை சென்றிருந்ததன் காரணத்தினால் தப்பிக் கொண்டனர். கட்டடம் முழுமையான சேதத்திற்குள்ளாகியது.

**◇ இவ்விடப்பெயர்வு மூலம் எங்கு சென்று இவ்வில்லத்தை நடத்தி வந்தீர்கள்?**

இங்கிருந்து இடம் பெயர்ந்து பூநகரி முழங்காவில் பிரதேசத்தில் தற்காலிக கொட்டகைகள் அமைத்து அதில் இயங்கி வந்து இன்று ஓயாத அலைகள்-02 இன் மூலம் கிளிநொச்சி நிலம் மீட்கப்பட்ட பின் மீண்டும் சொந்த நிலத்தில் இயங்கி வருகின்றது.

**◇ பராமரிப்புச் செலவுகள் பற்றிக் கூற முடியுமா?**

ஒரு பிள்ளைக்கு ஒரு மாத உணவுச் செலவு ஏறக்குறைய 2600 ரூபாவும், கல்விச் செலவு ஏறக்குறைய 275 ரூபாவும் செலவாகின்றது. இச் செலவு விதிவிலக்காகச் சில மாதங்களில் கூடுதலாக வருகின்றது. மருத்துவச் செலவு சராசரி 177 ரூபா முடிகின்றது. சாதாரணமான இத் தொகை சில காலங்களில் கூடுதல் தொகையாக மாறுகின்றது. மொத்தமாக 169 மாணவர்களுக்குமான செலவாகக் கிட்டத்தட்ட ஆறு லட்சம் ரூபா செலவாகின்றது.

**◇ சமூகத்தில் உள்ள ஒருவரோ அல்லது சமூக நிறுவனமோ உதவி புரியவிரும்பினால் அவ்வுதவிகளை எவ்வாறு வழங்கலாம்?**

அவ்வாறு உதவி செய்ய விரும்பினால் அதற்கான நடைமுறைகளை அதாவது வெளிநாட்டு உதவிகள் என்றால் அந்த நாட்டில் செயற்படுகின்ற தமிழர் புனர்வாழ்வுக் கழகக கிளைகளினூடாக வழங்கலாம். அவ்வாறு வழங்குவதன் மூலம் அவர்களின் உதவி எமக்குக் கிடைத்தமை உறுதி யாக இருக்கும்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கிளைகளினூடாகவும் செய்யலாம். கிளிநொச்சி இலங்கை வங்கியில் காந்தி சேவா சங்கத்தின் கீழ் காந்திநிலையம் என்ற பெயரில் C.3800 என்ற வங்கி இலக்கத்தில் பண வைப்புக்களை வழங்கி உதவி செய்யலாம்.

**◇ போருக்குப் படைகளில் ஆட் களைச் சேர்த்துக்கொள்ளும் பொருட்டு வன்னியில் இவ்வாறான இல்லங்கள் இயங்கி வருகின்றன என்ற இனவாதிகளின் கருத்து உண்மையானதா?**

எமது இல்லத்தினுடைய வரலாற்றை ஆரம்பத்தில் இருந்தே கூறியுள்ளோம். 1956 ஆம் ஆண்டு காலத்திலேயே காந்தி நிலையம், குருகுலம் போன்ற சிறுவர் இல்லங்கள் உருவாகியுள்ளது. ஆனால் தற்போது சிறுவர்களைப் போரில் ஈடுபடுத்துவது என்பதற்கும் நிறைய இடைவெளி இருக்கிறது. அக்காலப் பகுதியில் இருந்தே வன்னிப்பிரதேசம் கல்வியிலும், நல்லொழுக்கத்திலும், மூடநம்பிக்கையினாலும் பின்தங்கிய நிலையில் இருந்தமையினால் அவற்றை வளப்படுத்தும் நோக்கிலேயே ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது போர் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு நிர்க்கதியாக்கப்பட்டதால் சிறுவர்



களின் தொகை கூடியுள்ளதே தவிர இவ்வில்லங்கள் கல்வியிலும், ஒழுக்கத்திலும் வழிகாட்டியாகத் திகழ்ந்து வருகின்றன.

ஆனால் போருக்குப் படைகளைச் சேர்ப்பதற்குத்தான் இவ்வில்லங்கள் உருவாகியுள்ளன. என்ற இனவாதிகளின் கருத்து முற்றிலும் தவறானதே என்று கூறுகின்றேன்.

**◇ தங்களின் எதிர்காலத் தேவைகள் பற்றிக் கூறமுடியுமா?**

வன்னிப் பிரதேசத்தில் இதனுடைய தேவை மிக அதிகமாகவே உள்ளது. அதாவது பொருளாதாரத் தடை இராணுவத் தாக்குதல்களாலும் நாட்டின் பொருளாதாரம் சிதைக்கப்பட்ட நிலையில் கல்வியை வளப்படுத்தல் என்ற ரீதியில் எமது பக்கத்தில் நிறைய ஆர்வத்தோடு மாணவர்களை பாடசாலைகளுக்கு அனுப்புவதிலும், கல்வி நிலையங்களை உருவாக்குவதிலும் முக்கியத்துவம் உண்டு. அதனால் தற்போது எங்களிடம் உள்ள கட்டட வசதி போதுமானதாக இல்லை. நிலப்பரப்பு உண்டு. கட்டடங்கள் இல்லை. சுகாதார வசதிகளைப் பேணிக்கொண்டுதான் பிள்ளைகளை உள்வாங்கிக்கொள்ள வேண்டும். பராமரிப்பிற்கான செலவை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கத் தயாரான நிலையில் உள்ளது. ஆனால் கட்டட வசதி செய்து கொள்ள முடியாது. இந்த இரண்டு கட்டடங்களையும் திருத்திக்கொள்வதற்கு 57 லட்சம் ரூபா செலவாகியுள்ளது. அத்தோடு புதிய கட்டடங்கள் அமைக்கப் போதுமான நிதியுதவிகள் கிடைக்குமாக இருந்தால் சிறுவர்களை உள்வாங்கி பராமரிக்க முடியும் தொடர்ந்து சிறுவர்களை இணைப்பதற்கான விண்ணப்பங்கள் வந்தவண்ணமே உள்ளன.

தொடர்ந்து இவ்வில்லத்தை நடத்திச் செல்வதற்கு உதவிகள் புரிகின்ற, உதவி புரிந்த இனிய உள்ளங்களுக்கும் உறவுப்பாலமாக அமைந்த ஊடகங்களுக்கும் எமது இல்லத்தின் மூலம் நன்றி தெரிவிப்பதோடு தொடர்ந்து உதவிகள் புரிய வேண்டும் என்றும் கூறிக்கொள்கின்றோம்.

நேர்காணல்
**சு.பாஸ்கரன்**

***

## கல்வி அதிகாரியின் இலட்சினை பாடசாலை அதிபர்களால் திருட்டு!

(கொழும்பு)

பாடசாலை அதிபர்கள் மூவர் கோட்டக் கல்வி அதிகாரியின் உத்தியோகபூர்வ இலச்சினையைத் திருடிய சம்பவமொன்று பதுளை கோட்டக் கல்வி அலுவலகத்தில் நிகழ்ந்துள்ளது.

பதுளைப் பகுதியைச் சேர்ந்த அதிபர்கள் மூவர், உத்தியோகபூர்வ நிமித்தம் கோட்டக்கல்வி அதிகாரியைச் சந்திக்க கோட்டக்கல்வி அலுவலகத்திற்குச் சென்றனர். அங்கு குறிப்பிட்ட கல்வி அதிகாரி கடமையில் இருக்கவில்லை. அப்படியிருந்த போதிலும் மூன்று அதிபர்களும் குறிப்பிட்ட கல்வி அதிகாரியின் கடமை அறையில் அமர்ந்தனர். அக்கல்வி அதிகாரியின் மேசை மீது இருந்த அவரது உத்தியோகபூர்வ இலச்சினையை அதிபர் மெதுவாக எடுத்து மற்ற ஒரு அதிபரிடம் கொடுக்கவே அவர் அவ் இலச்சினையைத் தமது காற்சட்டைப் பைக்குள் மறைத்து வைத்துக் கொண்டு அலுவலகத்தை விட்டு வெளியேறும் போது தட்டச்சுக் கடமையிலிருந்த பெண் மூலம் கையும் மெய்யுமாகப் பிடிபட்டனர்.

அவ்வேளை கல்வி அதிகாரியும் அலுவலகத்திற்கு வந்து விடயத்தைக் கேட்டு அறிந்தனர்.

சம்பந்தப்பட்ட அதிபர்கள் மூவரும் மேற்படி அதிகாரியினால் அறிவுரை வழங்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

## சிறிலங்காவின் தேசிய பாதுகாப்பிற்கு பிரச்சினைகள் எதுவும் ஏற்படவில்லை

### -பாதுகாப்பு அமைச்சின் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் தேசிய பாதுகாப்பிற்கு எந்தவித பிரச்சினையும் ஏற்படவில்லை என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

முப்படைகளிடம் உள்ள ஆயுதங்கள் மற்றும் அவற்றின் வலிமைகள் குறித்து வெளியிடப்படும் கருத்துக்கள் தொடர்பாக எந்தவித விளக்கத்தையும் அளிக்க முடியாதுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகங்கள் ஊடாக முப்படைகளின் விபரங்களை வெளியிடுவது தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## திருட்டில் ஈடுபட்டவர் கைது!

வவுனியா பொலிசாரின் தீவிர நடவடிக்கை காரணமாகக் கொழும்பு-வவுனியா ரயிலில் கடந்த காலங்களில் பல திருட்டுக்களில் ஈடுபட்டு வந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து மீட்கப்பட்ட சோடாப் போத்தலில் காணப்பட்ட பானம் இரசாயனப் பரிசோதனைக்குக் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது.


ரயிலில் பயணம் செய்பவர்களுடன் திடீரென நண்பராகி அவர்களுக்குப் பானத்தைக் கொடுத்து அவர்களை மயக்கமடைய வைத்துவிட்டு நகை பணம் மற்றும் பெறுமதி வாய்ந்த பொருட்கள் கடந்த காலத்தில் அபகரிக்கப்பட்ட சம்பவங்கள் பல நடைபெற்றுள்ளன.

# தரவுத்தள முறைமை

தரவுகளை தகவல்களாக மாற்றும் செயற்பாடு தரவுகளை ஒருங்கமைக்கும் செயல் எனப்படும்.

தரவு **(data)** → ஒருங்கமைத்தல் **(Process)**
தகவல் **(Information)** → என இதனைச் சுருக்கமாகக் கூறமுடியும்.

இந்த நோக்கத்தை நிறைவேற்றும் கணினிக்கு நாம் முறைப்படி தரவுகளைப் பகுப்பாய்வு செய்து அவற்றின் தன்மைகளுக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தி வழங்குவது **(Input)** தொடங்கி ஒருங்கமைத்துப் பெறும் வெளிப்பாடுகள் **(Output)** வரையிலான அனைத்துச் செயற்பாடுகளும் டேற்றாபேஸ் மனேஜ்மன்ற் சிஸ்ரம் என அழைக்கப்படும். **(Data base managements system)** என்பதை சுருக்கமாக **DBMS** என அழைக்கப்படும். தமிழில் இதனைத் தரவுத்தளமுறைமை என அழைப்பர்.




குறித்தவொரு நிறுவனம் ஒவ்வொரு இலக்கையும் அடையும் நோக்கில் ஒவ்வொரு முகாமைத்துவத்தை நிர்வகிக்கிறது. அவ்வவ் முகாமைத்துவம் மேற்கொள்ளும் **DBMS** செயற்பாட்டை தொகுத்துப் பராமரிக்கும் செயற்றிட்டம் (அதாவது நிறுவனத்தின் அனைத்துச் செயற்திட்டங்களையும் உள்ளடக்கியது.) றிலேசனல் டேற்றாபேஸ் மனேஜ்மன்ற் சிஸ்ரம் **(Relational data base management system)** என்று அழைக்கப்படும். இம் முகாமைத்துவமானது தயார் நிலைப்படுத்தல் தொடக்க நிலைக்கு உள்ளாக்கல் உள்வழங்கல் ஒருங்கமைத்தல் வெளிக்கொணர்தல் ஆகிய தரவுகளை ஒருங்கமைக்கும் படிநிலைகளை முதன் நிலையாகக் கொண்டுள்ளது.

மேலும் தகவல்களைச் சேமித்தல், தரவுகளைத் தெரிவுக்கு உள்ளாக்கல்

**ஆர்.கே.ஜீவலிங்கம்**

தகவல்களைப் பிரித்தெடுத்தல், தகவல்களைத் தேடுதல், தகவல்களைத் திருத்தம்செய்தல் தகவல்களை வரிசைப்படுத்தல், தகவல்களை விருப்பிற்கேற்ப ஒழுங்கமைத்தல், தகவல்களை அறிக்கைப்படுத்தல் ஆகிய தகவல் பராமரிபட்பு முகாமைத்துவ நிலைகளையும் கொண்டுள்ளது.

மேலே குறிப்பிட்ட தரவுகளை ஒருங்கமைக்கும் படி நிலைகளுக்கு ஏற்ப தரவுகளைப் பகுப்பாய்வு செய்து **DBMS, RDBMS** முகாமைத்துவத்தைக் கையாளுவதற்கு ஏற்ப முதலில் வடிவமைப்புச் **(Design)** செய்தல் வேண்டும். அதன் பின்னரே இத்துறை சேர்ந்த மென்பொருளைக் கையாளமுடியும்.

இவற்றுக்கு உதாரணமாக விசுவல் டேற்றாப்பேஸ் **(Visual detabase)** விசுவல் பொக்ஸ்புறோ **(Visual foxpro)** அக்சஸ் **(Access)** அப்புரோச் **(Approch)** ஓரக்கிள் **(Oracle)** சைபேஸ் **(Sybase)** எனப் பெருந்தொகையான மென் பொருட்கள் உள்ளன. அப்படியாயின் உலகில் டேற்றாபேஸ் அப்பிளிகேசன்களே முன்னணியில் திகழ்கின்றன எனக்கருத முடிகின்றது.

# அச்சுத் துறைக்குரிய மென்பொருட்கள்

அச்சுப்பதிப்பு என்பது இன்று இனறியமையாத ஒரு விடயமாகும். இன்று உலகளாவிய ரீதியில் ஆயிரக்கணக்கான பத்திரிகைகள், சஞ்சிகைகள், பிரசுரங்கள், வெளியீடுகள், தினமும் வெளிவந்த வண்ணமே உள்ளன. இதனால் இத்துறையில் கணினியும் மிக முக்கிய பங்காளியாக மாறிவருகின்றது. இவ் வெளியீடுகளை பெருகுபடுத்தி கண்கவர் முறையில் இவற்றை அமைப்பதில் கணினியின் பங்களிப்பு அதிகரித்துச் செல்கின்றது. இதற்கென புதிய புதிய மென்பொருட்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

அச்சுத்துறையைப் பொறுத்தவரை பிரயோகிக்கப்படும் மென் பொருட்கள் டெஸ்க்ரொப்பப்பிளிசிங் **(Desk top publishing)** சுருக்கமாக டிரிபி **(DTP)** என அழைக்கப்படுகின்றன. இதற்கென அமைக்கப்பட்ட இம் மென்பொருட்கள் அச்சுக்கலையில் பெரும் புரட்சிகளை ஏற்படுத்தியுள்ளதுடன் முன்னைய முறைகளிலிருந்து மிகவும் இலகுவாகவும் அழகான முறையில் அச்சிடவும் உதவுகின்றன. கணினி அச்சுக்கோப்பை இலகுபடுத்தியுள்ளன.

இவற்றுக்கென விசேடமாக அமைக்கப்பட்ட மென்பொருட்களில் மிகவும் அதிகளவில் பாவனையில் உள்ளவையும் **Windows operating system** இல் இயங்கக் கூடியவையுமாக;

பேஜ்மேக்கர் **(Pagemaker)**
கோரல்றோ **(Corel draw)**
போட்டோசொப் **(Photoshop)**
போட்டோ எடிற்றர் **(Photoeditor)** போன்ற மென்பொருட்கள் உள்ளன.

## பேஜ்மேக்கா (Pagemaker)


இவற்றிலே அச்சுக்கோப்பிற்கும் பக்க வடிவமைப்பிற்கு மிகவும் முக்கியமானதும் பலராலும் பயன்படுத்தப்படுவதும் பேஜ்மேக்கர் எனப்படும் மென்பொருளாகும். இவற்றில் அல்டஸ் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டு அடொப் நிறுவனத்தால் வெளியிடப்படும் அடொப் பேஜ்மேக்கர் **(Adobe Pagemeker)** அதிகளவு பாவனையில் உள்ளது. இதில் பல பதிப்புக்கள் **(Version)** உள்ளன. **Pagemaker** 5.0,6.0,6.5,6.52 என இவை அழைக்கப்படுகின்றன. பல பத்திரிகை நிறுவனங்கள் அடொப் பேஜ்மேக்கர் 6.5 என்னும் மென்பொருளையே பாவித்துவருகின்றன.

இதில் அச்சுக்கோப்பு, விரும்பியவாறு பக்கங்களை



வடிவமைத்தல், வரைபடங்கள், புகைப்படங்கள் என்பவற்றை இணைத்தல் போன்றவற்றை இலகுவாகச் செய்யமுடியும். விரும்பிய மொழிகளில் அச்சிடமுடியும். ஏனைய பல மென் பொருட்களைப் பயன்படுத்தி அச்சுக்கோர்த்த அல்லது வடிவமைத்த விடயங்களை இதில் இணைக்கமுடியும் உதாரணமாக எம்.எஸ்.வேட், எம்.எஸ்.எக்சஸ் போன்றவற்றில் தட்டச்சுச் செய்தவற்றை இதில் இணைக்கமுடியும். இவ்வாறு பக்க வடிவமைப்பில் பல வசதிகளைக் கொண்டதாக இந்த அடொப் பேஜ்மேக்கர் மென்பொருள் உள்ளது.

## கோரல்றோ (Corel draw)



இது வரைகலைக்கு முக்கியமாகப் பயன்படுத்தப்படும் மென்பொருளாகும். இதில் பல்வேறு பதிப்புகள் வெளிவந்துள்ளன. பலவகை எழுத்துக்கள் **(Fonts)** என்பவற்றை உருவாக்கவும் அவற்றை விரும்பிய அளவில் அமைக்கவும் விரும்பியவாறு மாற்றிக் கொள்ளவும் பயன்படுகிறது. இதிலே அமைக்கப்பட்ட வரைபடங்கள், எழுத்துக்கள் பேஜ்மேக்கரில் இணைத்துக் கொள்ளக் கூடியதாகும். அதேவேளை இம்மென் பொருட்கள் மூலம் பக்கங்களை வடிவமைக்கவும் முடியும்.

## போட்டோ சொப் (Photoshop)

இம் மென்பொருள் புகைப்படங்களை கையாள உதவுகின்றது. சாதாரணமாக நாம் புகைப்படக் கருவி மூலம் எடுத்த புகைப்படங்களை கணினிகளில் உபயோகிக்கத்தக்கவாறு வருடிகள் **(Scaner)** மூலம் பெற்றுக்கொள்ள இம்மென்பொருள் உதவுகிறது. அத்துடன் இப்புகைப்படங்களைத் திருத்த, மாற்றியமைக்க, வெட்டுதல், ஒட்டுதல், போன்ற வேலைகளுக்கு இம்மென்பொருள் பயன்படுகின்றது. இதன்மூலம் புகைப்படங்களில் பல மாயத்தோற்றங்களை ஏற்படுத்தவும் முடிகிறது.

## போட்டோஎடிற்றர் (Photoeditor)

இம் மென்பொருளும் புகைப்படங்களைக் கையாள உதவுகின்றது.

இவை போன்ற மென்பொருட்களைப் பயன்படுத்தியே கணினிமூலம் வடிவமைக்கப்படும் பக்கங்களில் இணைக் கப்படும் புகைப்படங்கள் பெறப்படுகின்றன. அதாவது இவற்றின்மூலம் புகைப்படங்கள் மெருகூட்டப்பட்டு பேஜ்மேக்கர் மூலம் வடிவமைக்கப்படும் பக்கங்களில் விரும்பியவாறு இணைக்கப்படுகின்றன

சி.சிவபாலன்

# அதிபர் சேவை தரம்-1இல் உள்ளோருக்கு சம்பள உயர்வை வழங்க நீதிமன்றம் பணிப்பு

(கொழும்பு)

இலங்கை அதிபர் சேவை தரம் 1இன் சம்பள உயர்ச்சியையும், மிகுதிச் சம்பளத்தையும் வழங்குமாறு உயர் நீதிமன்றம் கல்வி அமைச்சைப் பணித்துள்ளது.

1.1.1995இல் இலங்கை அதிபர் சேவை தரம் 1இல் தெரிவானவர்களுக்கான சம்பள அளவுத்திட்டம் **105000/=-10X4200/= -15300** ஆகும்.

இது ஏனைய அதிபர் ஆசிரியர் சேவையுடன் ஒப்பிடும்போது குறைவானது.

எனவே சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்று உயர் நீதி மன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

1997இல் 02 வழக்குகளும் 1999 இல் 03 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டன.

இதனை ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்றம் 1.1.1995முதல் 31.12.1996 வரையான காலப்பகுதிக்கு **109800/= - 10X4200/= -157000/=** எனும் சம்பள அளவுப்படி சம்பளம் வழங்க வேண்டும் எனவும் அவர்களுக்கான சம்பள உயர்ச்சி, சம்பளப்பாக்கிகளை வழங்க வேண்டும் எனவும் தீர்ப்பளித்தது.

இதற்கான சுற்றுநிருபத்தை கல்வியமைச்சின் செயலாளர் வி.கே.எஸ். நாணயக்காரா நேற்று முன்தினம் வெளியிட்டார். ED/4/6/1/1/1 எனும் இலக்கமுடைய 2.6.2003 திகதியிடப்பட்டது இது.

ஆசிரியர் சங்கங்களின் கருத்துக்களை கல்வி அமைச்சு அதிகாரிகள் உரியவாறு நிறைவேற்றாமையினாலேயே கோடு, கச்சேரி என செல்ல வேண்டியதாயிற்று என தமிழர் ஆசிரியர் சங்கச் செயலர் த.மகாசிவம் கூறியுள்ளார்.

# மேசன் தொழில் நுட்ப பிரிவில் முப்பது பேருக்கு பயிற்சி

(பள்ளிக்குடா)

கிளிநொச்சி தொழில் நுட்பக் கல்லூரியின் பூநகரி அத்தாயில் இயங்கும் கிளையில் மேசன் தொழில் நுட்பப் பயற்சி நடைபெற்று வருகிறது.

இந்தப் பயிற்சி நெறியில் முப்பது மாணவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

மேலும், தச்சு வேலைக்கான பயிற்சி நெறியொன்று விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# மாணவர் போசாக்குத் திட்டத்தினால் பயன்!

## -கல்வியமைச்சு கூறுகிறது

(கொழும்பு)

கல்வி அமைச்சினால் நாடளாவிய ரீதியில் 1275 பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் போசாக்கு நிகழ்ச்சித் திட்டத்தினால் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பயன் பெற்றுவருவதாகக் கல்வி அமைச்சின் உயரதிகாரி கூறியுள்ளார்.

கல்வி அமைச்சின் "யாவருக்கும் கல்வி" எனும் முறையின் கீழ் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் இந்தப் போசாக்குத் திட்டத்தினால் முதலாம் தரத்தைச் சேர்ந்த 20 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் பயன் பெற்று வருகின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

## விளையாட்டுவிழா

(பள்ளிக்குடா)

பூநகரி நான்காம் கட்டையிலுள்ள மாவீரர் உதயன் முன்பள்ளி சிறுவர்களின் விளையாட்டு விழா கடந்த வியாழனன்று இடம்பெற்றது.

இதன்போது சிறுவர்களின் பல்வேறு விளையாட்டுகளும் இடம்பெற்றன.

# கொலைக் கலாச்சார யுகமொன்றை உருவாக்க ஜே.வி.பி. மீண்டும் முயற்சி!

## - அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆட்டுத்தோல் போர்த்திய புலிகளாய் ஜே.வி.பி.யினர் நடமாடுகின்றார்கள். வேடம் கலைந்தபின்னரே இவர்களின் சுயரூபம் வெளிப்படும் எனப் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் பாராளுமன்றத்தில் கூறியுள்ளார்.

மீண்டும் ஒரு கொலைக் கலாச்சார யுகமொன்றை ஏற்படுத்த ஜே.வி.பி.யினர் முயற்சி செய்கின்றனர். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்தில் இந்நாட்டு மக்களையும், தலைவர்களையும் கொன்றவர்கள் ஜே.வி.பி.யினர். இப்போது நல்லவர்கள் போல் வேசமிடுகின்றனர்.

பொலிஸ் ஆணைக்குழு நியமிக்கப்பட்டதும் சபைக்குள் சவப்பெட்டி கொண்டுவந்தது யார் என்பது தெரியவரும். இவ்வாறு சபை ஒத்திவைப்பு பிரேரணையின் போது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பொலிஸ ஆணைக் குழு விவாதத்தின்போது அவர் கூறியுள்ளார்.

# உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை திருத்தங்களுடன் மீண்டும் சமர்ப்பிக்க முடிவு!

(கொழும்பு)

**உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலத்தில் சில பிரிவுகள் அரசியல் யாப்பினை மீறுவதாகவும், இதனால் சட்டமூலத்தை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதையடுத்து இந்த சட்டமூலத்தினை சில திருத்தங்களுடன் மீண்டும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.**

வட-கிழக்கிற்கான உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைப்பதாகவும், கடந்த வருடம் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களை ரத்துச் செய்து புதிய வேட்பு மனுக்களை கோருவதற்கான அதிகாரத்தை தேர்தல் ஆணையாளருக்கு வழங்கும் வகையிலும் உள்ளூராட்சி திருத்தச் சட்டமூலத்தினை அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தது.

ஆனால் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினால் சட்டமூலத்தினை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்தச் சட்டமூலத்தின் சில வசன திருத்தங்களை மேற்கொண்டு மீண்டும் சபையில் சமர்ப்பித்து சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

கடந்த வருடம் வட-கிழக்கு உள்ளூராட்சித் தேர்தலுக்கென தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டு புதிய வேட்பு மனுக்களின் அடிப்படையிலேயே தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரியிருந்தது.

இதற்கமையவே உள்ளூராட்சித் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அடுத்த கட்ட நடவடிக்கையாகவே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலத்தில் திருத்தங்களை செய்து மீண்டும் சமர்ப்பிக்கப்பட வுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## பௌத்த பிக்கு கைது!

(மாத்தறை)

மாத்தறை பௌத்த விகாரை ஒன்றில் இருந்து புத்தர் சிலைகளை திருடியதாக சந்தேகிக்கப்படும் பௌத்த பிக்கு ஒருவரை மாத்தறை பொலிசார் கைது செய்துள்ளனர்.

150 வருடங்களுக்கு மேற்பட்ட பழைமை வாய்ந்த நான்கு சிலைகள் அந்த விகாரையில் இருந்து களவாடப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## 'அந்த ஒரு உயிர்தானா உயிர்' புத்தக வெளியீட்டு விழா

மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம். கோபாலரெத்தினத்தின் 'அந்த ஒரு உயிர்தானா உயிர்' புத்தகவெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் மாநகர ஆணையாளர் எஸ். நவநீதன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பேராசிரியர் சி. மௌனகுரு கலந்து கொண்டார். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம். தயாபரன், மாநகர ஆணையாளர் எஸ். நவநீதன் ஆகியோர் கலந்து கொண்டனர். இவ்விழாவில் சிறப்புரையினை பத்திரிகையாளர் ஜீ.நடேசனும், வெளியீட்டு உரையினை பத்திரிகையாளர் வ.ஜசிகரனும் ஆற்றினர். முதல் பிரதியை அம்பாறை மாவட்ட செய்தியாளர் ஏ.எல். எம்.ஷலீமும், 2வது பிரதியை மட்டக்களப்பு மாவட்ட செய்தியாளர் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.



## கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகள்

(அலுவலக செய்தியாளர்)

கீழே குறிப்பிடப்படுவோருடைய தேசிய அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சண்முகநாதன் டிபாகரன் 773394334V நவக்கிரி புத்தூர், நவட்ணம் ரஜிகலா 697690514V புளியங்கூடல் ஊர்காவற்துறை, சின்னத்தம்பி கனசபை 433250370V சின்னக்கோயில் வீதி, கோப்பாய், நடராசா ரதீஸ்குமார் 802520638V கொண்டலடி ஒழுங்கை நல்லூர், இராசன் மணிவண்ணன் 732723883V சுந்தரபுரம் வசாவிளான், இராமன் இராமதாஸ் 702651093X இராமனூர் புளியங்குளம், பொன்னுக்குமார் சிவகுமார் 763620360V வீரவாணி புத்தூர், மார்க்கண்டு சிவானந்தன் 832624080V பாலாவி தெற்கு கொடிகாமம், வேதநாயகம் கலையரசி 786222842V மருதன்குளம் ஓமந்தை, கார்த்தியேசு கருணாகரன் 620054518V கோட்டைகட்டியகுளம் அக்கராயன், பாலச்சந்திரன் கருணாதாஸ் 783284367V குஞ்சுக்குளம் மாங்குளம், சுப்பிரமணியம் தர்மராசா 653032900V இயற்றாலை வரணி, சிதம்பரப்பிள்ளை திலகராணி 718044073V பண்டாரவன்னி ஒட்டுசுட்டான், சுப்பையா சந்தனம் 420092091V புதுவாழ்வுத்திட்டம் மிருசுவில், செபஸ்தியாம்பிள்ளை ஜெயராஜ் 763084701V நாச்சிக்குடா வினாயகபுரம், முருகுப்பிள்ளை நிமலராஜா 730853467V 156ஆம் கட்டை விவேகானந்தநகர் கிளிநொச்சி, பத்மநாதன் பாக்கியநாதன் 672852684V இராமலிங்கம் வீதி உடுவில், பாக்கியலட்சுமி கனகசபை 428660331V சின்னக்கோயில் வீதி கோப்பாய், கார்த்தியேசு கருணேஸ்வரன் 681883282V நயினாதீவு, கணபதிப்பிள்ளை சசிபன் 853021822V கல்வயல் வீதி சாவகச்சேரி, தேவராசா கென்றிக் கஜேந்திரா 741613506V நல்லாயன் வீதி பண்டத்தரிப்பு, செல்லப்பா இராசையா 353551019V மன்னார் வீதி வவுனியா, மனோர்லிங்கம் இதயரூபி 846233180V 59/6 கனகபுரம் கிளிநொச்சி.

மேற்படி தேசிய அடையாள அட்டைகளை உரியவர்கள் கிளிநொச்சி ஏ-9 வீதியில் அமைந்துள்ள ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளவும். (பா)

## "விழித்தெழும் மனிதர்கள்" யாழ்.இல் தெருவெளி நாடகம்

(அலுவலக செய்தியாளர்)

பொ.செ.ரகுவின் "விழித்தெழும் மனிதர்கள்" தெருவெளி நாடகம் தற்போது யாழ் நகரில் சகல இடங்களிலும் நடாத்தப்பட்டு வருகின்றது.

கலைத்தாய் மன்ற கலைஞர்களினால் தற்கால சூழ்நிலையினை முற்று முழுதாக வெளிக்கொணரும் வகையில் மேற்படி தெருவெளி நாடகம் நடாத்தப்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## ஒட்டுசுட்டான்-முத்தையன்கட்டு பாலம் திருத்தியமைப்பு

(புதுக்குடியிருப்பு)

ஒட்டுசுட்டானையும் முத்தையன் கட்டையும் இணைக்கும் மாளிகா வயல் பாலம் போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து வருட காலமாக உடைந்த நிலையில் இப்பாலம் இருந்தமையால் முத்தையன்கட்டு மக்கள் நான்கு கிலோ மீற்றர் தூரம் நடந்தே ஒட்டுசுட்டானுக்குச் சென்று வந்தனர்.

இம்மக்கள் விடுத்த வேண்டுகோளைக் கருத்திற் கொண்டு ஒட்டுசுட்டான் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் தயாபரன் தலைமையில் முத்து விநாயகபுரம் கிராம சேவையாளர், சோமசுந்தரம் கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் பொதுமக்களின் அனுசரணையுடன் பாலம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு பகலாக முழுமையாகப் பணி புரிந்து இப் பாலம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளதாக முல்லை மாவட்ட தமிழீழ பொ.மே.நி. செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது. (26)

## களனி பல்கலைக்கழகத்தில் மாணவரிடையில் மோதல்

(கொழும்பு)

களனி பல்கலைக்கழகத்தில் இரண்டு மாணவ குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் ஆறு பேர் காயமடைந்துள்ளனர்.

இவர்களில் பலத்த காயத்துக்குள்ளான நான்கு மாணவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு கவலைக்கிடமான நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கருத்து முரண்பாடே மோதலுக்கு காரணம் என பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## நவீன தெளிகருவி அறிமுகம்!

மாமரங்கள், பலாமரங்கள், தென்னை போன்ற உயரமான மரங்களில் பூச்சி பீடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு ஏதுவான புதிய இயந்திர தெளிகருவியொன்று கடந்த வியாழக்கிழமை கற்சிலைமடுவில் அமைந்திருக்கும் முல்லை அகதிகள் புனர்வாழ்வுக்கழக கேட்போர் கூடத்தில் த.பொ.மே. நிறுவனத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச இணைப்பாளர் தயாபரன் தலைமையில் ஒட்டுசுட்டான் பிரிவு விவசாய போதனாசிரியரால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டதுடன் செயல் முறையும் செய்து காட்டப்பட்டது.

இந்நிகழ்வில் பெருமளவிலான விவசாயிகள் கலந்து கொண்டதாக த.பொ.மே. நிறுவனத்தின் முல்லை மாவட்ட செயலக செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (26)

## இடமாற்றம்

(அலுவலக செய்தியாளர்)

கனகபுரம் கி.சே.அலுவலக காரியாலயம் நேற்று முதல் டிப்போ வீதி சேவியர்கடைச் சந்திக்கருகாமையில் அமைந்துள்ள காரியாலயத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

மேற்படி காரியாலயம் இதுவரை காலமும் கனகபுரம் கி.அ. சங்க மண்டபத்தில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)


31 ஆம் நாள் நினைவில்

பிறப்பு 1998 ∴ 12 ∴ 15



இறப்பு 2003 ∴ 05 ∴ 25

கணேசலிங்கம் துவாரகா

கேப்பாப்புலவு, முள்ளியவளை.

24.06.2003 அன்று எமது இல்லத்தில் நடைபெறும் துவாரகாவின் 31ஆம் நாள் நினைவு நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்: கணேசலிங்கம் (வீரமணி) கேப்பாப்புலவு.

(3240)



6 ஆம் ஆண்டு நினைவலைகள்...

தாய் மடியில் 26 08 1974



தாயக மண்ணில் 24 06 1997

கப்டன் ஜெயச்சந்திரன்

(சிதம்பரப்பிள்ளை-சிவநாதன்)

சம்பவம்-பெரியமடு இராணுவத்தினருடனான தாக்குதலில்

செந்தமிழ் மண்ணைக் காக்க
சேனையில் இணைந்த வீரா!
நொந்து போய் உள்ளோர் எல்லாம்
உன்பணி தொடர உள்ளார்.....

முகவரி: புலிமைச்சீநாதகுளம் மாங்குளம்

தகவல்:- சி.சுதாசீலன் (போராளி)

(சி.8209)

## சிந்தனைக்கு



விடுதலையை வேண்டி நிற்கும் ஒரு தேசிய சமுதாயத்தின் உறுதிப்பாட்டை எந்தவொரு சக்தியாலும் அழித்துவிட முடியாது.

**தமிழீழத் தேசியத்தலைவர்**

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 24-06-2003

# சந்திரிகாவின் குழப்பம்!

சுதந்திரக்கட்சியின் 14ஆவது தேசிய மாநாட்டில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆற்றிய உரையானது, அவரின் குழப்பத்தினை வெளிக்காட்டும் ஒன்றாகவே உள்ளது. அவரின் பேச்சில் எமக்குக் கிடைத்த பகுதியானது அவர் ஒன்றிற்கொன்று முரணானதையும், யதார்த்தத்திற்கு மாறாகவும் பேச முற்பட்டுள்ளதையும், தமது கட்சித் தொண்டர்களுக்கு தெளிவானதொரு வழிகாட்டுதலை அவரால் நடத்த முடியாது உள்ளதையுமே வெளிக்காட்டி நிற்கின்றது.

சனாதிபதி சந்திரிகா தனதுரையில் மூன்று விடயங்களைச் சுட்டிக் காட்டியுள்ளார். இதில் ஒன்று ரணில் அரசாங்கத்தைச் சாடுகின்றது. இன்னொன்று விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சாடுகின்றது. மற்றையது, தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாய் உள்ளது. இதில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் உத்தியோகப்பற்றற்ற தமிழீழத்தைப் புலிகளுக்கு வழங்க முயற்சித்து வருவதென்பது அரசாங்கத்தின் மீதான குற்றச் சாட்டாகவுள்ளது.

இவை எந்தவகையில் பொருத்தப்பாடானதொரு குற்றச் சாட்டுக்களாக இருக்கமுடியும்? வடக்கு-கிழக்கு மாகாணத்தின் இடைக்கால நிர்வாகம் என்பது எவ்வாறு உத்தியோகப்பற்றற்றோ அன்றி உத்தியோக பூர்வமாகவோ தமிழீழத்தை வழங்குவதாக இருக்க முடியும்? அதுமாத்திரமல்ல, இடைக்கால நிர்வாகம் பற்றி அவர்கள் கூட முதலில் பிரஸ்தாபித்தே இருந்தனர். அவ்வாறானால், உத்தியோகப் பற்றற்ற ரீதியில் விடுதலைப்புலிகளுக்கு தமிழீழத்தை வழங்க இவர்கள் தயாராக இருந்தார்களா?

அடுத்ததாக விடுதலைப்புலிகள் மீது "மீண்டும் யுத்தத் திற்குத் தயாராகி வருகின்றனர்" என்பது குற்றச்சாட்டாகவுள்ளது. சிறிலங்கா அரசு யுத்த நிறுத்த உடன்பாடு செய்து கொண்ட பின்னரும் பெருமளவிலான நிதியை ஆயுதப்படையினருக்கென ஒதுக்கீடு செய்துள்ளது. அதுமாத்திரமல்ல, இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளுடன் நெருக்கமான இராணுவ உறவைப் பேணுவதில் அரசாங்கம் அக்கறையாகவுள்ளது. யுத்தம் ஒன்று வந்தால் தமக்குப் பெருமளவு இராணுவ உதவிகள் கிடைக்கப்பெறும் என்ற முழு நம்பிக்கையுடன் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. இதன்னை வெளிப்படுத்தியும் உள்ளது.

இவை ஒருபுறம் இருக்க விடுதலைப்புலிகளுக்கும்-சிறிலங்கா ஆயுதப்படையினருக்கும் இடையில் இராணுவச் சமநிலை பேணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் கருதுகின்றனர். இதுவே யுத்தநிறுத்த உடன்பாட்டைப் பாதுகாக்க உதவும் என்பது அவர்களின் அபிப்பிராயம். அவ்வாறு இருந்தும், இராணுவம் பெருமளவிலான ஆயுத தளபாடங்களையும் யுத்த உபகரணங்களையும் கொள்வனவு செய்து கொண்டிருக்கையில் விடுதலைப்புலிகள் இராணுவ பலத்தை அதிகரிப்பதற்கான வழக்கமான வாய்ப்புக்கள் கூடத் தடைப்பட்டுள்ள நிலையில் உள்ளனர். இந்நிலையில் புலிகளின் பலம் அதிகரித்து வருவதாகப் பேசப்படுவது எவ்வாறு பொருத்தப்பாடானதாகும்.

இதனைத் தவிர விடுதலைப்புலிகள் இராணுவ ரீதியில் பலப்பட்டு வருவதாகவும், யுத்தம் ஒன்றிற்குத் தயாராகிவருவதாகவும் யாருடைய தகவல் அடிப்படையில் சனாதிபதி சந்திரிகாவால் குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன? முப்படைகளின் தகவல்களின் அடிப்படை எனின் அதற்கான ஆதாரங்களை வெளியிட வேண்டியது தானே. முப்படைத் தளபதிகள் கூறுகின்றனர் எனக் கூறுவதில் மட்டும் இவ்விடயம் உண்மையாகிவிட முடியாது.

ஆனால், இவ்வாறு குற்றச்சாட்டைச் சுமத்தும் சனாதிபதி சந்திரிகா விடுதலைப்புலிகளுடன் தமது அரசாங்கம் பேச்சுக்களை நடாத்தும் எனக் கூறுவது எத்தனை தூரம் யதார்த்த பூர்வமானதாக இருக்கமுடியும். அதாவது சமாதானப் பேச்சுக்களை முறியடித்துக் கொண்டு யுத்தத்திற்குத் தயாராகும் இயக்கத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை எவ்வாறு நடாத்த முடியும். சனாதிபதி பேச்சுவார்த்தைக்குத் தயாரானால் யுத்தத்தைத் தாங்கள் நடாத்த மாட்டோம் எனப் புலிகள் உறுதி கூறியுள்ளனரா?

அடுத்ததாக விடுதலைப்புலிகளுக்கு உத்தியோகப் பற்றற்ற முறையில் இடைக்கால நிர்வாகத்தை வழங்குவதாகக் கூறி அதனை நிராகரிக்கும் சனாதிபதி சந்திரிகா தாம் பேச்சுவார்த்தைகளை நடத்துவதானால் புலிகளுக்கு வழங்கப்போவது எதனை? இடைக்கால நிர்வாகம் வழங்காது போனால் பேச்சுவார்த்தை மேசைக்கு வரப்போவதில்லை என்ற நிலைப்பாட்டுடன் இருக்கும் புலிகள் சனாதிபதி சந்திரிகாவிற்காக விட்டுக்கொடுப்புக்களை செய்யத் தாம் தயாராகவுள்ளதாக யாருக்கும் அறிவித்துள்ளனரா?

இந்த வகையில் பார்க்கையில், சனாதிபதி சந்திரிகாவின் மாநாட்டுப் பேச்சானது அவரது குழப்பத்தையே வெளிக்காட்டுவதாகின்றது. அரசாங்கத்தையும், புலிகளையும் எதிர்க்க வேண்டும். அதேவேளை, சர்வதேச உலகத்திற்கு சமாதானத்தின் மீதான தனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும் என்ற சந்திரிகாவின் குழப்பமான நிலைப்பாடே அவரது இப்பேச்சின் முரண்பாடுகளுக்குக் காரணமாகும். அதாவது தனது உணர்விற்கும்-அதற்குப் பொருத்தமற்ற அரசியல் சூழ்நிலைக்கும் இடையில் அவர் இணைப்பொன்றை ஏற்படுத்த முனைந்ததே அவரின் பேச்சில் வெளிப்படுவதாகவுள்ளது.

ஆயினும், சந்திரிகா குமாரதுங்கவின் முரண்பாடான கருத்துக்களே அவரின் நிலைப்பாட்டை உலகிற்கு வெளிப்படுத்தப் போதுமானதாகும். ஆனால், அவரது குழப்பமான கருத்துக்கள் அவரது கட்சியினரை வெகுவாகக் குழப்பத்திற்கு உள்ளாக்கியிருக்கும். இது ஏற்கனவே அநுரா பண்டாரநாயக்கா போன்றவர்களினால் குழப்பத்திற்குள்ளாகிப் பலவீனமாகிப் போயுள்ள கட்சியை மேலும் குழப்பத்திற்கு உள்ளாக்குமே ஒழிய அதற்கு நன்மைபயக்கக் கூடியதாக இருக்கமாட்டாது.

# சனாதிபதி செயலகம், கண்காணிப்புக் குழுவின் முரண்பட்ட கருத்துக்களால் சந்தேகம் எழுகிறது!

## -கப்பல் மூழ்கடிப்பு குறித்து ராஜித சேனாரத்ன

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சனாதிபதி செயலகமும், போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்களும் தெரிவித்துள்ள முரண்பாடான கருத்துக்கள் சமாதான நடவடிக்கைகளைச் சீர்குலைக்க மேற்கொள்ளப்பட்ட சதி நடவடிக்கையா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது எனக் காணி அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இந்தச் செயல் திட்டமிட்டுச் செய்யப்பட்டதாக இருந்தால் அது அரச துரோகச் செயலாகும். எனவே அரசாங்கம் இது தொடர்பாக உண்மை நிலையை ஆராய விசாரணையை மேற்கொண்டுள்ளது.

இச்சம்பவமானது பெரும் சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. கப்பல் மூழ்கடிக்கப்பட்ட பின்னரே பாதுகாப்பு அமைச்சருக்குத் தெரிய வந்துள்ளது. அது மட்டுமல்ல இத் தாக்குதலை மறைமுகமாக நடத்துவதற்கு கடற்படையினருக்கு உத்தரவு வழங்கியது யார். கடற்படைத் தலைமை அதிகாரிக்கும் தெரியாமல் கடற்படையினர் இவ்விடயத்தில் செயற்பட்டனரா, இச்சம்பவத்தை வேண்டுமென்றே இராணுவத் தளபதிக்கும், பாதுகாப்பு அமைச்சருக்கும் கூறாது மறைத்தனரா போன்ற பல்வேறு சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளன.

அத்தோடு சனாதிபதி செயலகக் கருத்துக்களும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் கருத்துக்களுக்குமிடையே பரஸ்பரம் மாறுபாடுகளே உள்ளன.

கப்பல் காலை 5.30 மணிக்கு அண்மித்ததாகவே மூழ்கடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. 6.30 மணி வரையிலும் கடற்படையின் தலைமை அதிகாரி இதனை அறிந்திருக்கவில்லை என்று கூறப்படுகிறது. சனாதிபதி கடற்படைத் தலைமை அதிகாரிக்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கப்பல் மூழ்கடிக்கப்பட்டமைக்கு வாழ்த்துத் தெரிவித்த போதே அவர் இச் சம்பவத்தைத் தெரிந்து கொண்டுள்ளார். இச்சம்பவங்கள் அனைத்தையும் சேர்த்துப் பார்க்கும் போது சந்தேகங்கள் ஏற்படுகின்றன.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் 1-(3) சரத்தின் கீழ் நாட்டின் இறைமையைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசுக்கும் புலிகளுக்குமுண்டு.

ஆனால், இந்த விடயம் தொடர்பாக கடற்படையினர் மேற்கொண்ட இரகசிய நடவடிக்கைகள் சமாதான முன்னெடுப்பைக் குழப்பும் சதி முயற்சியா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

# தமிழ்க் குழுக்களுக்கு பாதுகாப்பளிப்பது தொடர்பாக அரசாங்கம் ஆராய்வு!

(கொழும்பு)

தமிழ் அமைப்புகளுக்கு மீண்டும் ஆயுதங்களை வழங்கினால் கடும் எதிர்ப்புக் கிளம்புமென்பதால் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாக அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த சில மாதங்களாக வடக்கு-கிழக்கு மற்றும் கொழும்பு நகரில் வைத்து இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் தமிழ் அமைப்புக்களின் உறுப்பினர்களும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளியன்று பிரதமருக்கும் சனாதிபதிக்குமி டையே நடந்த சந்திப்பின்போது தமிழ் அமைப்புக்களின் பாதுகாப்பு உடனடியாக அதிகரிக்கப்பட வேண்டு மென சனாதிபதி கேட்டுக் கொண் டார்.

போர்நிறுத்த உடன்பாடு அமுலிலுள்ள நிலையில் தமிழ்க் குழுக்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்படுவதற்குப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பும் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கும் என்பதால் இவர்களுக்குப் பாதுகாப்பு வழங் கப்படுவது தொடர்பாகத் தற்போது ஆலோசிக்கப்படுகிறது.

ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ் அணிகளுக்கே இந்தப் பாதுகாப்புத் தேவையாகவுள்ளது. இதற்கமைய வடக்குக் கிழக்கில் தமிழ் அமைப்புக்களின் அலுவலகங்களின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் மலசல கூடமின்றி 51,883 குடும்பங்கள் உள்ளன!

## - ஆய்வின் மூலம் தகவல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மலசலகூடம்இல்லாத 51,883 குடும்பங்கள் உள்ளதாக ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

இவ்வருடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் மாவட்டத்தின் 14 செயலகப் பிரிவுகளிலுமே 51,883 குடும்பங்கள் மலசலகூடமில்லாது அல்லலுறுவது தெரியவந்துள்ளது.

செங்கலடி செயலகப்பிரிவில் 8433 குடும்பங்கள், வெல்லா வெளிப் பிரிவில் 8206 குடும்பங்கள், களுவாஞ்சிக்குடி பிரிவில் 5634 குடும்பங்கள், கிரான் செயலகப் பிரிவில் 4976 குடும்பங்கள் வாகரைப் பகுதியில் 4052 குடும்பங்கள் வவுணதீவுப் பிரிவில் 4547 குடும்பங்கள் மலசல கூட வசதியின்றி வாழ்க்கை நடத்துகின்றனா் என அவ்வறிக்கை கூறுகின்றது.

## – கரைதுறைப்பற்று பி. செயலகத்திற்கு –

# நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் கட்டட வேலை ஆரம்பமாகவில்லை

கரைதுறைப்பற்றுப் பிரதேசச் செயலருக்கான புதிய பணிமனை அமைப்பதற்கு 9 மில்லியன் (90 இலட்சம்) ரூபா நிதி வந்துள்ள போதும் கட்டடம் அமைப்பதற்கான இடம் துப்புரவு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. கட்டட வேலைகள் எதுவும் ஆரம்பிக்கப்படாமல் இருப்பதோடு தனியார் வீடு ஒன்றிலேயே தற்போது கரைதுறைப்பற்றுப் பிரதேசச் செயலகம் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (20)

# பாகிஸ்தான் சனாதிபதியின் அவா!

இந்தியா பாகிஸ்தான் இடையே மீண்டும் கிரிக்கெட் போட்டிகளை நடத்த வேண்டும் என பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் விருப்பம் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் சென்றிருந்த முஷாரப், லண்டனில் பாகிஸ்தான்-இங்கிலாந்து அணிகளுக்கிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியைப் பார்த்து ரசித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தியா-பாகிஸ்தானிடையே மீண்டும் கிரிக்கெட் போட்டிகள் தொடங்கவேண்டும் என்பது தான் தமது விருப்பம் என்றும், இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் கூறியுள்ளார்.

இவ்வாறு செய்வதன் மூலம் இரு நாடுகளுக்கிடையேயும் கிரிக்கெட் வளர்ச்சியடையும் என்றும் கூறியுள்ளார்.

# 3-ம் நாள் முடிவில் மே.இ 4விக்-305 ஓட்டங்கள்

மேற்கிந்தியத் தீவு அணிக்கும் சிறிலங்கா அணிக்கும் இடையில் சென்லூசியஸ் மைதானத்தில் நடைபெற்று வரும் முதல் டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டத்தின் போது மழை காரணமாக ஆட்டம் நிறுத்தப்படும் போது மேற்கிந்தியதீவு 4 விக்கெட்டுக்களை இழந்து 305 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதில் அணித்தலைவர் பிறைன்லாரா ஆட்டம் இழக்காது 97 ஓட்டங்களையும் சாமுவேல் 5 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

முத்தையா முரளீதரன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தார்.

முன்னதாக சிறிலங்கா அணி தனது முதல் இனிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 354 ஓட்டங்களைப் பெற்றமை தெரிந்ததே.



● சிறுவர் பூங்கா திறப்பு ● பரிசளிப்பு

# சிறப்புற நேற்று நடைபெற்ற குருகுலம், காந்தி இல்லம் ஆண்டுவிழா

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடத்தப்பட்டுவரும் குருகுலம் மற்றும் காந்தி இல்லம் ஆகிய இரண்டு சிறுவர் இல்லங்களினதும் 43ஆம், 46ஆம் ஆண்டு நிறைவுப் பெருவிழாவும், சிறுவர் பூங்கா திறப்பு விழாவும் நேற்று மாலை குருகுலம் சிறுவர் இல்லத்தில் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

இதில் பொது ஈகச்சுடரை கிளி. வலயக் கல்விப் பணிப்பாளர் அரியரத்தினம், மருத்துவப் பிரிவைச் சேர்ந்த தேவா, கரைச்சிப் பிரதேச செயலர் பொன். நித்தியாணந்தன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் ஏற்றி வைத்தார். தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியினை தமிழர் புனர்வாழ்வுக் கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் இனியவன் ஏற்றிவைத்தார். குருகுலம் சிறுவர் இல்லக் கொடியை குருகுல சிறுவர் இல்ல இயக்குனர் கிரிஜா ஏற்றினார். காந்தி இல்லக் கொடியை காந்தி இல்ல இணைப்பாளர் கரிகரன் ஏற்றினார்.

அடுத்து மேற்படி சிறுவர் இல்லங்களின் ஆண்டு நிறைவை முன்னிட்டு குருகுலம் சிறுவர் இல்லத்தில் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா திறந்து வைக்கப்பட்டது. இதில் பூங்காவின் பெயர்ப் பலகையை கிளி. அரச அதிபர் இராசநாயகம் திரைநீக்கம் செய்து வைக்க, திருமதி கௌரி மகேஸ்வரன் பூங்காவுக்கான நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

பூங்காவில் அமைக்கப்பட்டிருந்த மாவீரர் நினைவுத் தூபியை அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி திரை நீக்கம் செய்து மலர் அஞ்சலி செலுத்தினார். அடுத்து மேற்படி சிறுவர் இல்ல சிறுவர்களின் மலரஞ்சலியுடன் பூங்கா பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வில் சிறப்புரைகளை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், கிளி. அரச அதிபர் தி. இராசநாயகம், கிளி. வலயக் கல்விப் பணிப்பாளர் அரியரத்தினம், தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் றெஜி, அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் நிகழ்த்தினர்.

அடுத்து இவ்விரண்டு சிறுவர் இல்லங்களினதும் ஆண்டு நிறைவை முன்னிட்டு 'மகிழும் உள்ளங்கள்' என்ற நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந் நூலினை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் வெளியிட, முதல் பிரதியை கல்விப் பணிப்பாளர் அரியரத்தினம் பெற்றுக் கொண்டார்.

அடுத்து குருகுலம், காந்தி நிலையம் ஆகிய சிறுவர் இல்லங்களில் சிறப்பாக செயற்பட்டு வரும் மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

பல்வேறு துறை சார்ந்த பிரதிநிதிகள், மக்கள் என ஏராளமானவர்கள் கலந்து சிறப்பித்தனர்.

(லோ)

## பதிவு செய்யவும்

உதிரியாக இருக்கும் அடிச்சட்டங்களும் இயந்திரங்களும் பதிவுக்குட்படுத்தி சான்றிதழ் பெற்றுக் கொள்ளவேண்டும் எனவும் இது வரை பதிவு செய்யாதிருப்பின் பதிவு செய்த பின்ஊர்தியிலிருந்து அகற்றி மாற்றுவதற்கு அனுமதிக்கும் படியும் 01.07.2003 முதல் உதிரியாக இருக்கும் அடிப்படைச் சட்டங்களும், இயந்திரங்களும் இலவசமாக பதிவுகள் மேற்கொள்ளப்படும் எனவும் ஊர்தி திருத்தக உரிமையாளர்களுக்கு மோட்டார் ஊர்திப்பதிவுப்பகுதியினர் அறியத் தருகின்றனர்.

## மீண்டும் படகுச்சேவை

திருகோணமலைக்கும் மூதூருக் இடையிலான சேருவில இரண்டு என்ற கப்பல் பயண சேவை நீண்ட காலத்தின் பின்னர் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# சு.க.மாநாட்டில் ரத்வத்தவை சங்கடத்துக்குள்ளாக்கிய கைதட்டல்

(கொழும்பு)

நேற்றுமுன்தினம் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சி மாநாட்டில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் தவறான வேளையில் கைகளைத்தட்டி அனுருத்த ரத்வத்தவுக்கு சங்கடமான நிலையொன்றை உருவாக்கினர்.

கொரஹொல்லவில் நடந்த வருடாந்த மாநாட்டில் சிறையதிகாரிகளின் பாதுகாப்புடன் முன்னாள் சக்திவாய்ந்த அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த வந்துகலந்து கொண்டார். அவர்புறப்படவேண்டிய நேரத்தில் கட்சித்தலைவி சந்திரிகா குமாரதுங்க உரையாற்றிக் கொண்டிருந்தார். அவ்வேளையில் ஜெனரல் ரத்வத்த புறப்பட்டுச் செல்லப்போகின்றார் என்ற விடயத்தை சனாதிபதி சந்திரிகா மாநாட்டில் கலந்து கொண்டோருக்கு அறிவிப்பாக வெளியிட்டார். அப்போது பார்வையாளராகக் கலந்து கொண்டோர் கைதட்டி ஆரவாரம் செய்தனர். இது ஜெனரல் ரத்வத்த சிறைக்குச் செல்வதை வரவேற்பது போல் அமைந்ததை உணர்ந்து கொண்டு உடனடியாக கைதட்டுவதை நிறுத்திக்கொண்டனர்.

# முறிகண்டி ஏ-9 வீதியில் பாரவூர்தி தடம் புரண்டது

பயணம் செய்த ஒருவர் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

முறிகண்டி ஏ-9 வீதியில் பாரவூர்தி ஒன்று தடம் புரண்டுள்ளது. நேற்று நண்பகல் 12.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த பாரவூர்தி தடம் புரண்டு



விபத்துக்குள்ளாகிய போது அதில் பயணம் செய்த மாணிக்கம் தர்மராசா (வயது 41) சுன்னாகம் யாழ்ப்பாணம்) என்பவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி முதலாம் கட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா,09)

# பொங்கு தமிழுக்கு வருகை தருவோர் மீது இராணுவக் கெடுபிடியிலிருந்து பாதுகாப்பு

- யாழ்.கண்காணிப்புக்குழு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பொங்கு தமிழ் நிகழ்விற்கு வருகை தரவிருக்கும் மக்களுக்கு எந்தவிதத்திலும் அச்சுறுத்தல் ஏற்படாது இருக்கத் நாம் நடவடிக்கை எடுக்கப் போவதாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்ப்பாண இணைப்பாளர் கரீனா எரிக்சன் தெரிவித்துள்ளார்.

மனிதநேய அமைப்புப் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு வின் யாழ்ப்பாண இணைப்பாளரைச் சந்தித்து கலந்துரையாடினார்கள்.

நாடெங்கிலுமிருந்து பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்து கொள்ள வரும் மக்களுக்கு இராணுவக் கெடுபிடிகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவான நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்ற மனிதநேய அமைப்பினரின் வேண்டுகோளையடுத்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்ட இணைப்பாளர்இவ்வாறுதெரிவித்துள்ளார்.(33)

# வடமராட்சியில் மீனவர்மீதான தடைகள் அதிகரிப்பு

வடமராட்சிப்பகுதியில் மீனவர்கள் மீதான தடையை அண்மைக்காலமாக இராணுவத்தினர் அதிகரித்துள்ளனர்.கற்கோவளம் கடற்கரைப்பகுதியில் கரைவலை கொண்டு மீன்பிடிப்பதற்கு இராணுவத்தினர் புதிய கட்டுப்பாடுகளைப்பிறப்பித்துள்ளார்கள்

இவ்வாறு கரையிலிருந்து 200மீற்றருக்குள் தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு அனுமதிப்பத்திரம் தேவையில்லை என்று முன்பு அறிவித்திருந்தனர். ஆனால், தற்பொழுது அனுமதிப்பத்திரம் பெற்றே மீன்பிடித் தொழிலில் ஈடுபடவேண்டும் என்பதால் மக்கள் பெரிதும் விசனமடைந்துள்ளனர்.(33)

## தேசியத்...

மீள அமைத்துக் கொடுக்கவில்லை. அழிக்கப்பட்டுள்ள பாடசாலைகள் மீளவும் திருத்தி அமைக்கப்படவில்லை. இன்றும் பாடசாலைகளில் ஆக்கிரமிப்பு இராணுவம் குடியிருக்கும் கூடாரங்களாகவே உள்ளன.

எமது இளம் சந்ததி கல்வி கற்பதற்கான வசதிகள் ஏதுமின்றி தரையில் அமர்ந்தே கல்வி கற்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. நவீன தொழில் நுட்ப்பங்களையோ நவீன கால கல்வி முறைகளையோ இனவாத சிங்கள அரசாங்கங்கள் எமது இளம் சந்ததிக்கு வழங்க முன் வரவில்லை.

இன்று உலகின் பல பாகங்களிலும் மலிந்து கிடக்கும் கணினிகளைக்கூட எமது இளம் சந்ததியில் பெரும்பாலானவர்கள் தமது கண்களால் பார்க்கவில்லை.

ஆனால், இன்று உலகம் நிறைய மாறி வருகின்றது. தகவல் தொழில் நுட்பம் மனித வாழ்வில் இரண்டறக் கலந்து அவனது வாழ்வில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது.

இப்படியான மாற்றங்களுக்குக் காரணமான அறிவையும், தொழில் நுட்பங்களையும் தமது இன உறவுகளோடு பகிர்ந்து தமது உறவுகளையும் தகவல் தொழில் நுட்ப அறிவியல் உலகத்திற்கு நிகராக வளர்த்தெடுக்கும் முயற்சியாகவே 'வன்னி ரெக்' நிறுவப்பட்டுள்ளது. இது இன்றைய அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியையும் அதன் ஆக்கப் பிரயோகங்களையும் நமது இளம் சந்ததிக்கு வழங்கி எமது தேச நிர்மாணப் பணிக்கு பெரும் பங்காற்றும். இப்படியாக அளப்பெரும் தேசிய தேச நிர்மாணப் பணியில் ஈடுபட்டுள்ள கலிபோர்னியாவைத் தளமாகக் கொண்ட சர்வதேச தமிழ் தொழில் நுட்ப நிபுணர்களினது அமைப்பிற்கும் அதற்குத் தாராளமாக நிதியுதவி அளிக்கும் அமெரிக்க வாழ் தமிழ் மக்களுக்கும் தேசியத் தலைவரின் சார்பாகவும், எமது மக்கள் சார்பாகவும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்தோடு, இங்குள்ள பாரிய தேவைகள் உணர்ந்து வன்னி ரெக்கை நிறுவ நேரடியாக உழைத்தவர்களுக்கும் அதன் நிர்வாகிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும், தகவல் தொழில் நுட்பம் செழித்தோங்கும் சிலிக்கன் வலியில் இருந்து இங்குள்ள தமது உறவுகளோடு தமது அறிவாற்றலைப் பகிர்ந்து கொள்ளவந்துள்ள துறைசார் நிபுணர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்தோடு இந்த வன்னி ரெக் மேலும் விரிவுபடுத்தப்பட்டு எமது தேச நிர்மாணப் பணிக்கு மேலும் பங்காற்ற வேண்டும் என வாழ்த்துகிறோம். (லோ)

## பேச்சுக்கள்...

ளுக்குப் பயன்படுத்தும் விதம் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரிட்டிஷ் பிரத மமந்திரியிடம் விளக்கினார். இப் பேச்சுவார்த்தையின் போது இரு நாடுகளுக்குமிடையேயான நட்புறவு குறித்தும் எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை பிரிட்டிஷ் பாராளுமன்ற அரசியல் விவகார துறை அமைச்சரைச் சந்தித்து உரையாடினார். அதிகாரப் பகிர்வு தொடர்பாகபிரிட்டிஷ் அரசாங்கத்திடம் காணப்படும் நீண்ட கால அனுபவம் குறித்துக் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இலங்கையின் இடைக்கால நிர்வாகம் அமைப்பது தொடர்பாக பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உதவியைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன.

பிரிட்டிஷ் அரசியல் அமைப்பு விவகாரத் துறை அமைச்சர் இலங்கையின் இடைக்கால நிர்வாகம் குறித்து பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஆலோசனைகளையும் வழங்குவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை.பிரிட்டிஷ் உள்துறை அமைச்சரையும் ரணில்சந்தித்துள்ளார்.

இச் சந்திப்பில் வெளியுறவுத் துறையமைச்சர் டிரோன் பெர்னாண்டோ, அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், அமைச்சர் மிலிந்த மொறகொட, பிரதமரின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன். சட்டமா அதிபர் கமலசபேசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பிரதமமந்திரி நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளமை தெரிந்ததே.

## இ.தொ.க.வின்...

மையிலான குழுவினர் மறியல் போராட்டங்களைக் குழப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

நுவரெலியாவில் கந்தப்பளை வீதியிலுள்ள காவிரிய என்ற இடத்தில் துப்பாக்கிகளுடன் சென்ற இக் குழுவினர்கைகலப்பில் ஈடுபட்டமையால்அமைச்சர்ஆறுமுகம் தொண்டமானின் உடை கிழிக்கப்பட்டதுடன் கட்சித் தொண்டர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மாதர்ஸ் தோட்டப் பகுதியில் வீதி மறியலில் ஈடுபட்ட தொண்டர்கள் மீது நவீன் திஸாநாயக்கவின் ஆதரவாளர்கள் பரா ஊர்தியை ஏற்றியதில் மற்றுமொருவர் படுகாயமடைந் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தெஹிவளை...

கர வண்டியும் கைப்பற்றப்பட்டது. குறித்த சந்தேக நபர் விடுதலைப் புலிகளின் பிஸ்ரல் குழு உறுப்பினர் என்று பொலிசார் கூறுகின்றனர்.

சந்தேக நபரைக் கைது செய்ய முற்பட்டபோது அவர் சைனைட் அருந்தி தற்கொலை செய்ய முற்பட்டதாக மேல் மாகாணத் தென்பிராந்தியப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். கைதானவர் இப்போது தெஹிவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சீனாவில் தயாரிக்கப்பட்ட 9. எம். எம் ரகத் தன்னியக்கத் துப்பாக்கி ஒன்று இதற்கெனப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும், மதன் குமார் என்ற சந்தேக நபர் கொலை செய்யப்பட்ட பொலிஸ் இன்ஸ்பெக்ருடன் நீண்ட காலமாக நெருங்கிய உறவு வைத்திருந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. சந்தேக நபர் மட்டக்களப்புப் பகுதியைச் சேர்ந்தவராவர் என்றும், கொலை நடைபெற்ற ஒரு மணித்தியாலத்திற்கு முன்னர் கொலை செய்யப்பட்ட சுனில் காப்றோவுடன் உரையாடிக் கொண்டிருந்ததாகவும் தெஹிவளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவிக்கின்றார்.

## சாகாமம்...

அதிகமான மீனைப் பெறுகின்றனர்.

இது தொடர்பாக இம்மீனவர்கள் இதுவரை எந்த அரசாங்க உத்தியோகஸ்தர்களிடமோ பாராளுமன்ற உறுப்பினர்களிடமோ கதைக்கவில்லை. ஏனெனில். தங்கள் உயிருக்கு ஆபத்துவரும் என்பதனால் எவ்விதமான முறைப்பாடுகளும் செய்யாதுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். நாவலர்...

யிடப்பட்டுமுள்ளார்கள்.

இப்பகுதியிலுள்ள பிரவுண் வீதியிலுள்ள கலட்டிப் பகுதிகளில் ரோந்து நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

இப்பகுதியிலேயே பொங்கு தமிழ் நிகழ்வு நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (33)

## வன்னி ரெக்..

துறைப் பொறுப்பாளர் தமிழினி ஏற்றிவைத்தார். தொழில் நுட்ப நிறுவன பெயர் பலகையை கிளி. அரச அதிபர் இராசநாயகம் திரைநீக்கம் செய்து வைத்தார். தகவல் தொழில் நுட்ப மண்டபத்தை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

அடுத்து, அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களின் ஆசிச்செய்தியை பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் தூயவன் வாசித்தார். அதனையடுத்து சிறப்புரைகளை கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம், தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன், யாழ். பல்கலைக் கழக பேராசிரியர் நடராட்ணராஜா ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் அரச அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்கள் என ஏராளமானவர்கள் கலந்து கொண்டிருந்தனர். (லோ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூன் மாதம் 24ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.